# செய்யுள் திரட்டு

## தமிழ் இளநிலைப் பகுதி-1

தமிழாய்வுத் துறை

மாட்சிமைதங்கிய மன்னர் கல்லூரி

(தன்னாட்சி B+)

புதுக்கோட்டை- 622 001.

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை- 600 098.

# மூன்றாம் பருவம்

## அலகு - 1

1. சிலப்பதிகாரம் -கனாத்திறம் உரைத்தகாதை
2. மணிமேகலை -ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை
3. சீவகசிந்தாமணி -விமலையார் இலம்பகம்
4. பெரிய புராணம் -இளையான்குடி மாறனாயனார் புராணம்.

## அலகு - 2

# காப்பியங்கள்

## சிலப்பதிகாரம்

ஐம்பெருங்காப்பியம் என்ற தொடரை நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர் ஆள்கின்றார். ஐம்பெருங்காப்பியங்கள் எவை என்பதைப் பின்னால் வந்த பழம்பாடல் ஒன்று பட்டியலிடுகின்றது. அதன்படிச் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணிக்கு அடுத்ததான இரண்டாம் இடத்தைப் பெறுகின்றது. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் இது 3 காண்டங்களையும் 30 காதைகளையும் பெற்று விளங்குகின்றது.

## கனாத்திறமுரைத்த காதை

அன்பார்ந்த மாணவர்களே! நுமக்குப் பாடப்பகுதியாக அமைந்துள்ள கனாத்திற்முரைத்த காதை புகார்க் காண்டத்தில் ஒன்பதாவது காதையாக அமைந்துள்ளது. கண்ணகி தான் கண்ட கனவைத் தன் தோழி தேவந்தியிடம் கூறுவதே இக்காதையின் முக்கிய நோக்கமாகும்.

### காதைச் சுருக்கம்

ஞாயிறு மறைந்த மாலைப் பொழுது, புகார் நகரத்துப் பெண்கள் நெல்லும் மலரும் தூவி, விளக்கேற்றி இல்லுறை தெய்வத்தை வழிபட்டனர். கண்ணகியின் பார்ப்பனத் தோழி தேவந்தி அந்நகரில் உள்ள பாசண்டச் சாத்தன் கோயிலுக்குச் சென்று ‘கண்ணகி அவள் கணவனைப் பெற வேண்டும் என வேண்டுகிறாள். அவள் கண்ணகியை அடைந்து ‘நீ உன் கணவனைப் பெறுவாயாக’ என வாழ்த்தினாள். அது கேட்ட கண்ணகி தான் கண்ட கனவினை அவளிடம் கூறினாள். அதற்கு விடையாகத் தேவந்தி ‘வருந்தாதே! நீ கணவனால் வெறுக்கப் படவில்லை; முற்பிறப்பில் கணவனுக்குச் செய்ய வேண்டிய ஒரு நோன்பிலிருந்து தவறிவிட்டாய்; சோம குண்டம், சூரிய குண்டம் துறை மூழ்கிக் காம தேவனை வழிபட்டால் கணவனுடன் இம்மையிலும் மறுமையிலும் சேர்ந்து வாழலாம்; நாமும் காமவேளை வணங்குவோம் என்றாள். கண்ணகி ‘பீடன்று’ என மறுத்தாள். அப்பொழுது கோவலன் கண்ணகியைத் தேடி வந்தான். தன் தவறுக்கு வருந்தினாள். உடனே கண்ணகி தன் காற்சிலம்புகளைக் கொடுக்க முன்வந்தாள். மதுரைக்குச் சென்று அச்சிலம்புகளை விற்றுப் பொருள் ஈட்டலாம் என்று கூறிய

புறப்பட்டான.

### மாலதியின் வழிபாடு (1-14)

பூம்புகார் மகளிர் ஞாயிறு மறைந்த மாலைப் பொழு முல்லை மலரைத் தூவி மணிவிளக்கு ஏற்றினர்; இரவுப் பொழு கேற்ற ஆடை உடுத்தினர்; அணிகலன் அணிந்தனர்.

முன்னொரு நாள் மாலதி என்பவள் தன் மாற்றாள் குழந்தைக் பாலூட்டும் போது பால் விக்கி அக்குழந்தை இறந்தது. மாற்றாளு கணவனும் பழி தூற்றுவாரே எனக் கலங்கினாள். இறந்த குழந்தையை கையில் ஏந்தினாள். தேவர் தருவாகிய கற்பகம் நிற்கும் கோயில், ஐராவதம் நிற்கும் கோயில், பலதேவர் கோயில், சூரியதேவன் கோயில், மாசாத்தான் கோயில், அருகன் கோயில், ஆகிய கோயில்களுக்கு சென்றாள். 'தெய்வங்களே! எனக்குற்ற துன்பத்தைத் தீர்ப்பீர்களாக' என வேண்டினாள்; பயன் இல்லை.

### இடாகினிப் பேயின் செயல் ( 15-22)

பின்னர் மாலதி, பாசண்டச்சாத்தன் கோயிலை அடைந்தாள். தன் துன்பத்தை நீக்குமாறு வேண்டினாள். அப்பொழுது இடாகினிப் பேய் தோன்றி,

**செய்தவ மில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்**
**பொய்யுரையே யன்று பொருளுரையே**

என்று கூறிமாலதி கையிலுள்ள இறந்த குழந்தையைப் பிடுங்கி கொண்டு இருளில் மறைந்தது; பின் குழந்தையின் பிணத்தை வாயில் போட்டு விழுங்கியது.

### பாசண்டச் சாத்தனின் கருணை (23-28)

குழந்தையை இழந்த மாலதி இடியுண்ட மயில் போல துடித்தாள்; ஏங்கி அழுதாள். பாண்டச் சாத்தன் அவள் நிலை கண்டு பெரிதும் இரங்கினான். அவளை அழைத்து 'நீ செல்லும் வழியில் உன் குழந்தையைக் காண்பாய்' என ஆறுதல் கூறினான். பின் பாசண்ட சாத்தன் குழந்தையாகக் குயில்களையுடைய சோலையில் ஒரு மரத்தடியில் கிடந்தான். அம்மாயக் குழந்தையை எடுத்து மார்போடணைத்த மாலதி, அக்குழந்தையை மாற்றாளிடம் தந்து மகிழ்ந்தாள்.

தேவந்தியின் துயரமும் வழிபாடும் (29-38)

மாலதியின் துயர் துடைப்பதற்குக் குழந்தையாகத் தோன்றிய பாசண்டச் சாத்தன் வளர்ந்து பிரம்மச்சரிய நிலை அடைந்தான்; மறைகளில் வல்லமை பெற்றான்; தாய் தந்தை இறந்தபின் அவர்களுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களைச் செய்தான்; தாயத்தாரோடு வழக்குரைத்து வென்றான்; தேவந்தி என்பவளை மணந்து இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டான். ஒரு நாள் தேவந்தியை அழைத்து அவளுக்கு,

> பூவந்த உண்கண் பொறுக்கென்று மேவித்தன்
> மூவா இளநலம் காட்டியெம் கோட்டத்து
> நீவா எனவுரைத்து ....

நீங்கினான். தேவந்தியும் 'தன் கணவன் புண்ணியத் துறைகளாடச் சென்றுள்ளான் என்றும் அவனை மீட்டுத் தருக' என்று ஒரு பிரார்த்தனையைச் சொல்லிப் பாசண்டச் சாத்தன் கோயிலுக்குத் தினசரி சென்று வழிபடுதலை மேற்கொண்டிருந்தாள்.

தேவந்தி கண்ணகிக்காக வேண்டல் (39-44)

கண்ணிகிக்கும் தன்னைப் போலக் கணவனைப் பிரிந்த துயர் உண்டு என உணர்ந்த தேவந்தி, கண்ணகியின் துயரைப் போக்க வேண்டும் என்று நினைத்தாள். பாசண்டச்சாத்தன் கோயிலை அடைந்து அறுகம்புல், சிறுபூளைப்பூ, நெல் ஆகியவற்றைத் தூவித் தொழுதாள்; பின் கண்ணகியின் துயரைத் துடைக்குமாறு இறைவனிடம் வேண்டினாள். பின் கண்ணகியிடம் சென்று 'நீ உன் கணவனைப் பெறுவாயாக' என வாழ்த்தினாள்.

கண்ணகி கண்ட கனவு (45 - 54)

தேவந்திக்கு மறுமொழி கூறிய கண்ணகி, உன் வாழ்த்துக் காரணமாக நான் என் கணவனைப் பெறுவேன்; ஆயினும் நேற்று இரவு கண்ட கனவினால் என் உள்ளம் நடுங்குகிறது' என்று கூறித் தான் கண்ட கனவைக் கூறத் தொடங்கினாள். 'நானும் என் கணவன் கோவலனும் இங்கிருந்து சென்று ஒரு பெரிய நகரை அடைந்தோம்; அந்நகரில் உள்ள மக்கள் இடு தேளைப் பிடித்து என் மீது போடுவது போல் மிகப் பெரிய பழியை எங்கள் மீது சுமத்தினர். அப்பழி மொழியால் கோவலனுக்குத் தீங்கு நேர்ந்தது என்று பிறர் சொல்லக் கேட்ட நான், அரசன் முன் சென்று வழக்குரைத்தேன். அதனால் அவ்வரசனோடு அவ்வூருக்கும் தீங்கு

உனக்கு நான் கூற மாட்டேன். அங்கு நேர்ந்த தீங்கு என் தீவினைப் பயன் போலும். மேலும் என்னோடு பொருந்திய மேலோனாகிய கோவலனுடன் நான் பெற்ற நற்பேற்றினை நீ கேட்பாயானால் அது உனக்கு நகைப்பை உண்டாக்கும் என்றாள் கண்ணகி.

**கண்ணகியின் உள்ள உறுதிப்பாடு (55-64)**

கனாத்திறம் கேட்ட தேவந்தி கண்ணகியை நோக்கி கீழ்வருமாறு கூறத்தொடங்கினாள்.

'பொன்னாலான வளையலை அணிந்த கண்ணகியே! நீ உன் கணவனால் வெறுக்கப்படவில்லை; முற்பிறப்பில் உன் கணவன் பொருட்டுச் செய்யவேண்டிய நோன்பினைச் செய்யத் தவறினாய். கடலொடு காவிரி சென்றலைக்கும் புகார் நகருக்கு அருகில், தாழை மலர் மணம் பரப்பும் நெய்தல் நிலத்துச் சோலையிலே சோமகுண்டம் சூரியகுண்டம் என்னும் இரு பொய்கைகள் உள்ளன. அப்பொய்கைகளில் நீராடிக் காமவேள் கோட்டம் சென்று காமதேவனை வணங்கும் பெண்கள், இம்மையில் தம் கணவருடன் கூடிப் பிரியா வாழ்வு வாழ்ந்து இன்புறுவர்; மறுமையிலும் போக பூமியில் தேவராய்ப் பிறந்து பிரியாது இன்பம் நுகர்வர்; எனவே நாமும் ஒரு நாள் அவற்றில் நீராடுவோம் என்ற தேவந்தி கூறினாள். அதனைக் கேட்ட கண்ணகி 'பீடன்று' என்று கூறி அவள் கருத்தை ஏற்க மறுத்தாள்.

**கோவலன் வருகை (65-71)**

அப்பொழுது குற்றேவல் செய்யும் சிறு பெண் ஒருத்தி ஓடி வந்தாள்.

**காவலன் போலும் கடைத்தலையான் வந்துநம்**
**கோவலன் போலும் ...**

என்று கூறினாள். வந்த கோவலனும் கண்ணகியின் பள்ளியறை நோக்கிச் சென்றான். கண்ணகியும் அவன் பின்னால் சென்றாள். கண்ணகியின் வாடிய மேனியும் வருத்தமும் கண்டு உள்ளம் வருந்தினான். 'வஞ்சம் பொருந்திய கொள்கையையுடைய மாயத்தானோடும் கூடி ஆடிய தீய ஒழுக்கத்தால் நம் குலத்தவர் தேடி வைத்த மலை போன்ற செல்வமெல்லாம் தொலைந்து ஒழிந்தன. அதனால் உண்டான வறுமை எனக்கு நாணத்தைத் தருகிறது' என்றான்.

**சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக்**
**குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த**
**இலம்பாடு நாணுத் தருமெனக் ...**

—மணிமேகலைக்கு அறவணர் ஆபுத்திரன் திறம கூறிய பாட்டு—

[மணிமேகலைக்கு, அறவணர், ஆபுத்திரனின் வரலாற்றினை உரைக்கின்ற பகுதி இது. அவன் பாத்திரம் பெறுவதற்கு முன்னருள்ள செய்திகள் மட்டுமே இந்தக் காதையில் அறவணரால் கூறப்பெறுகின்றன.]

## 1. சாலி பெற்ற மகன்

'மாபெரும் பாத்திரம் மடக்கொடிக்கு அருளிய
ஆபுத் திரன்திறம், அணியிழை! கேளாய்;
வார ணாசியோர் மறையோம் பாளன்,
ஆரண உவாத்தி, அபஞ்சிகன் என்போன்
பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து,
கொண்டோற் பிழைத்த தண்டம் அஞ்சித்,
தென்திசைக் குமரி யாடிய வருவோள்;
சூன்முதிர் பருவத்துத் துஞ்சிருள் இயவிடை
ஈன்ற குழவிக்கு இரங்கா ளாகித்
தோன்றாத் துடவையின் இட்டனள் நீங்க—

அணியிழையே! மிக மேன்மை பொருந்திய அமு
சுரபியை மணிமேகலைக்கு அருளிச்செய்த ஆபுத்திரனி
வரலாற்றைக் கேட்பாயாக: காசியின்கண் வேதநெறியாள
ஒருவன் இருந்தான். வேதம் ஓதுவிக்கும் தொழிலினனா
அவன் 'அபஞ்சிகன்' என்பவன். அவன் மனைவியான 'சா
கற்புநெறியாகிய காவலின் எல்லையைக் கடந்து சென்
வளாயினாள். அதனால், மணந்துகொண்டவனுக்கு
துரோகம் செய்ததற்குரிய தண்டனைக்கு அஞ்சிய அவ
தென்திசைக் குமரியின்கண் நீராடிவிட்டு வந்
கொண்டிருந்தாள். வருபவள், சூல்முதிர்ச்சி அடைந்

வழியிடையிலே, தான் பெற்ற குழந்தைக்கும் இரங்காதவளாக, அவ்விடத்துத் தோன்றிய ஒரு தோட்டத்திலே, அதனை இட்டுச் சென்றுவிட்டாள்.

## 2. பாலூட்டிய பசு!

தாயில் தூவாக் குழவிதுயர் கேட்டோர்
ஆவந்து அணைந்தாங்கு அதன்துயர் தீர,
நாவால் நக்கி, நன்பால் ஊட்டிப்,
போகாது எழுநாட் புறங்காத்து ஓம்ப—

தாயற்றுப் பசியினாலே அழுதுகொண்டிருந்த அக் குழந்தையின் துயரக்குரலினைக் கேட்ட ஒரு பசுவானது அதனருகே சென்று சேர்ந்தது. அதன் துயரம் தீருமாறு நாவினாலே நக்கிக் கொடுத்து, நல்ல பாலும் அதற்கு சுரந்து ஊட்டிற்று. அந்தக் குழந்தையை விட்டு அகலாமல் ஏழு நாட்கள் அது பாலூட்டி அதனைப் பாதுகாத்து வந்தது. [தூவா - உண்ணா. புறங்காத்தல் - பாதுகாத்தல்

## 3. இளம்பூதி எடுத்தான்

வயனங் கோட்டிலோர் மறையோம் பாளன்,
இயவிடை வருவோன், இளம்பூதி என்போன்;
குழவி ஏங்கிய கூஉக் குரல் கேட்டுக்
கழுமிய துன்பமொடு கண்ணீர் உகுத்தாங்கு,
"ஆமகன் அல்லன்; என்மகன்" என்றே,
காதலி தன்னொடு கைதொழுது எடுத்து—

வயனங்கோடு என்னும் ஊரினனான ஒரு மறையோம்பு பார்ப்பனன், அந்த வழியாகத் தன் மனைவியுடனே வந் கொண்டிருந்தான். இளம்பூதி என்போனாகிய அவ குழந்தை ஏங்கி அழுகின்ற குரலினைக் கேட்டான். த உள்ளத்தே நிரம்பிய துன்பத்தோடு அதன் நிலைமைக்கு கண்ணீர் சொரிந்தான். 'இவன் ஆமகன் அல்லன்; இவ என் மகன்' என்று சொல்லி, அவனைத் தனக்குக் காட்டி தந்த இறைவனுக்குக் கைகுவித்தவனாகத், தன் மனை யுடனும் கூடி அதனை வாஞ்சையுடன் எடுத்தான்.

மார்பிடை முந்நூல் வனையா முன்னர்,
நாவிடை நன்னூல் நன்கனம் நவிற்றி,
ஓத்துடை அந்தணர்க்கு ஒப்பவை எல்லாம்;
நாத்தொலைவு இன்றி, நன்கனம் அறிந்தபின்—

"நமக்கோர் மகன் பிறந்தான்; நம் கிளை இனிச் சிறப்புறும்" என்று மகிழ்ந்து, தம் ஊருக்குச் சென்று, தம் உறவினரோடும் கூடி அவர்கள் களிப்புற்றனர். அந்தச் சிறுவனின் மார்பினிடத்தே முப்புரிநூலினை அணிவியாததன் முன்பாகவே, அவனுடைய நாவினாலே வேத வேதாந்தங்களை நல்ல முறையில் ஓதப் பயிற்றுவித்தான் இளம்பூதி. மறையோதுபவரான அந்தணர்களுக்குப் பொருந்துபவை எல்லாம் நாப்பிறழ்ச்சியின்றி, அச்சிறுவனும் நல்லபடியாக ஓதுவதற்கு அறிந்தனன். அதன் பின்னர்—

## 5. கொலை வேள்வி கண்டான்

அப்பதி தன்னுளோர் அந்தணன் மனைவயின்
புக்கோன்—ஆங்குப் புலைசூழ் வேள்வியில்,
குருஉத்தொடை மாலை கோட்டிடைச் சுற்றி,
வெருஉப்பகை அஞ்சி, வெய்துயிர்த்துப் புலம்பிக்
கொலைநவில் வேட்டுவர் கொடுமரம் அஞ்சி,
வலையிடைப் பட்ட மானே போன்றாங்கு,
அஞ்சிநின்று அழைக்கும் ஆத்துயர் கண்டு—
நெஞ்சுநடுக் குற்று, நெடுங்கணீர் உகுத்துக்—

அச் சிறுவன், ஒரு சமயம், அவ்வூரிலுள்ளவோர் அந்தண...ன் வீட்டிற்குச் சென்றான். அவ்விடத்தே, ஊனுண்ணலை...நதுகின்ற வேள்விச்சாலையைக் கண்டான். அங்கே, நிற...பொருந்திய மாலை கொம்பிலே சுற்றப்பட்டதாக, அச்சந்த...ற பகைக்கு அஞ்சி, வெவ்விதாக நெடுமூச்செறிந்து கதறி...கொண்டிருந்தது ஒரு பசு. கொலைத்தொழிலைச் செய்கின்...ட்டுவருடைய கொடுமரமான வில்லிற்குப் பயந்து ஓடி...ன்று, வலையினிடத்தே அகப்பட்டுத் துடிக்கின்ற மானை...ன்று, அங்கே அச்சத்தோடு நின்ற கதறும் அப் பசுவி...ரத்தைக் கண்ட அச்சிறுவன், நெஞ்சம் நடுக்கமுற்றான்...தியான கண்ணீரைச் சொரிந்து வருந்தினான்.

செல்கதி உண்டோ!, தீவினை யேற்கு!
அல்லலுற்று அழுத அவள்மகன் ஈங்கிவன்;
சொல்லுதல் தேற்றேன், சொற்பயம் இன்மையின்;
புல்லவோம் பன்மின், புலைமகன் இவ"னென—

அவ்விடத்தே இருந்தவர்களுக்குள்ளே ஒரு மறையவன், "இவனுடைய பிறப்பின் இரகசியத்தை யானறிவேன்" என்று அதனைச் சொல்லத் தொடங்கினான்.

"வழி நடந்த வருத்தத்தோடு இளைத்த உடலினளான பார்ப்பனி ஒருத்தி, வேதவிதிப்படி சென்று குமரிப் பெருந் தெய்வத்தின் பாதங்களை முறையோடும் வணங்கித், தன் உறவினரினின்றும் நீங்கியவளாக வந்துகொண்டிருந்தாள். அவள் பெயர் சாலி. அவளை, 'நின்னூர் யாது? இங்கு நீ வருவது எதுபற்றி?" என்றேன். எனவும், அந்த மறையவள், தான் வருகின்ற வரலாற்றை எனக்கு உரைப்பாளாயினாள்—

"வாரணவாசி நகரத்திலேயுள்ள, சிறந்த வேதங்களிலே முதன்மையாளனாகவும், வேதமோதுவிக்கும் உபாத்தியாக வும் விளங்கும் ஒரு பார்ப்பானின் பெறுவதற்கு அரிய மனைவி யான். பார்ப்பார்க்குத் தகாத வழியிலே நடந்துகொண் டேன். கற்பாகிய காவலைக் கைவிட்டுப் பிசகிச் சென்றேன். அதனால், என் கணவனையும் இழந்தேன். அவர்கள் அடித்துத் துன்புறுத்துவார்கள் என்ற பயம் உடையவளுமா யினேன். அதனால் விரைந்து செல்லும் மக்களுடனே கூடிய வளாகத் தென்திசைக் குமரித் துறையாடுவதற்கு வந்தேன். குமரியாடி வந்துகொண்டிருந்த யான்—

"பொற்றேரினையுடைய பாண்டியனின் கொற்கை யாகிய பேரூர்க்கு ஒரு காவததூரம் கடந்தவளாக, ஆயர் களின் இருப்பிடத்திற்கு அருகே வந்தேன். அங்கே ஒரு குழந்தையையும் பெற்றேன். பெற்ற குழந்தைக்கு இரங்கும் உள்ளமில்லாதவளாகி, அவ்விடத்தே கண்ணில் தோன்றிய ஒரு தோட்டத்தினுள்ளே அதனைப் போட்டுவிட்டும் வந்து விட்டேன். "இனி, செல்லுவதற்கான ஒரு நற்கதியும் தீவினையாட்டியாகிய எனக்கு உண்டோ?' என்று துன் முற்று அழுதனள்.

அவளுடைய மகனே இவ்விடத்துள்ள இவன். எ சொல்லால் விளையும் பயன் ஏதும் இல்லாமையினால், இ வரை இதனைக் கூறுவதற்குத் துணிவின்றி இருந்தேன் இவனைத் தீண்டாது போவீராக! இவன் இழிந்த மகன் என்றனன்.

13.

ஆபுத்திரன், பின்பு அமர்நகை செய்து,
"மாமறை மாக்கள் வருங்குலம் கேண்மோ;
முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய
கடவுட் கணிகை காதலஞ் சிறுவர்
அருமறை முதல்வர் அந்தணர் இருவரும்!
புரிநூன் மார்பீர்! பொய்யுரை யாமே?
சாலிக்கு உண்டோ, தவறென உரைத்து,
நான்மறை மாக்களை நகுவனன் நிற்ப—

அவன் சொன்ன தன் பிறப்பு வரலாற்றைக் கேட்ட பின்னர், ஆபுத்திரன் சிறிதாக நகைத்தான். பின்னர், "பெரிய வேதங்களை உணர்ந்த வேதியர்கள் வருகின்ற குலமரபினைக் கேளுங்கள். ஆதிமறைகட்கு முதல்வனாகிய பிரமனுக்கு எதிரே தோன்றிய தேவதாசியாகிய திலோத்தமையின் காதற்சிறுவர்கள் அல்லரோ, அரிய மறை முதல்வர் என நீவிர் போற்றுகின்ற அந்தணர்கள் இருவருமான வசிட்டரும் அகத்தியரும்! முப்புரி நூலணிந்த மார்பினரே! அது பொய்யுரையாகுமோ? அது உண்மையாயின், சாலிக்கு மட்டும் தவறு ஏதேனும் உளதாகுமோ?" என்று சொல்லியவாறே, அந்த நான்மறை மாக்களைக் கண்டு, இகழ்ச்சியோடும் சிரித்தபடியே நின்றான்.

## 14. அவன் உற்ற துன்பம்

"ஓதல் அந்தணர்க்கு ஒவ்வான்" என்றே
தாதை பூதியும் தன்மனை கடிதர,
"ஆகவர் கள்வ"னென்று அந்தணர் உறைதரும்
கிராமம் எங்கணும் கடிஞையிற் கல்லிட—
மிக்க செல்வத்து விளங்கியோர் வாழும்
தக்கண மதுரை தான்சென்று எய்திச்—

'இவன் மறையோதும் அந்தணர் குடிக்குப் பொருத்தமற்றவன்' என்று, அவனை வளர்த்த தந்தையான இளம்பூதியே, தன் வீட்டினின்றும் அவனை வெளியேற்றி விட்டான். 'யாகப் பசுவைக் கவர்ந்துபோயின கள்வன் இவன்' என்று சொல்லிப் பார்ப்பார் வாழும் கிராமத்து எல்லாம், அவன் பிச்சைப் பாத்திரத்திலே சோறிடாமல் கல்லைப் போட்டார்கள். அவன், அதன்பின் மிகுதியான செல்வத்தால் விளக்கமுற்றோர்கள் வாழ்கின்ற தென் மதுரையினைச் சென்று அடைந்தான்—

## 13. ஆபுத்திரனின் இரக்கச் சிந்தை

சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்து
அந்தில் முன்றில் அம்பலப் பீடிகைத்
தங்கினன் வதிந்து தக்கணப் பேரூர்,
ஐயக் கடிஞை கையின் ஏந்தி,
மையறு சிறப்பின் மனைதொறும் மறுகிக்,
"காணார், கேளார், கால்முடப் பட்டோர்,
பேணுநர் இல்லோர், பிணிநடுக் குற்றோர்;
யாவரும் வருக" என்று இசைத்துடன் ஊட்டி,
உண்டொழி மிச்சில் உண்டு, ஓடு தலைமடுத்துக்,
கண்படை கொள்ளும் காவலன் தானென் —

சிந்தையின் தெய்வமான கலைமகளின் கலைச்சிறப்பு நிறைந்த கோயிலின் முன்வாயிலிடத்தேயுள்ள, பீடிகையை யுடைய அம்பலத்தின்கண்ணே தங்கியிருப்பவனாயினான் அவன். அந்தத் தென்மதுரைப் பேரூரிடத்தே, பிச்சைப் பாத்திரத்தைக் கையில் ஏந்தியவனாகக் குற்றமற்ற சிறப்பினையுடைய வீடுகள்தோறும் சுற்றி வருவான். கிடைத்த பிச்சையாகிய உணவினைக் "கண்ணற்றவரே! செவிடரே! கால்முடம் பட்டவரே! ஆதரிப்பார் இல்லாதவரே! நோயால் துன்புற்றவரே! யாவரும் வாருங்கள்" என்று கூவியழைத்து, அவர்கட்கு முதலில் ஊட்டுவான். ஊட்டியது போக எஞ்சியிருக்கும் உணவினைத் தான் உண்டுவிட்டு, அந்த ஓட்டினைத் தலைக்கு அடியிலே வைத்து கொண்டு கண்ணுறங்குவான், அறங்காப்போனான அந்த ஆபுத்திரன் —என்க.

சீவக சிந்தாமணி :

தமிழின் பெருங்காப்பியமாகக் கிடைக்கின்ற காப்பியங்களுள் ஆசிரியரால் இயற்றப்பட்டது சீவக சிந்தாமணி ஆகும். விருத்தம் எனும் புதிய யாப்பினை இந்நூலின் மூலம் முறையாகக் கையாளப் பட்ட சிறப்புடையது. அதனால் இக்காப்பியம் யாப்பகத்தில் சிறந்து கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற காப்பியங்களுக்கு அடிப்படை யாகவும், முன்னோடியாகவும் அமைந்துள்ள பெருமையுடையது.

பெயர்க்காரணம் :

சிந்தாமணி - நினைத்த பொருளைத் தரும் மணி. இன்னும், சிந்தாமணி என்பது தேவர்கள் பெற்று வைத்திருந்த அருமணி போன்றது என்க. அது போல இந்நூலைப் படிப்போர் அறிவுப் பொருள் அனைத்தும் பெறுக்கே ஏற்றவாறு படைத்துள்ளார் இந்நூல் இப்பெயர் பெற்றது எனலாம்.

சாவத் தலைவனான தன் மகனை விசயமாதேவியார் முதல் முதலாக இட்டு அழைத்த பெயர் சிந்தாமணி என்பதாகும். பின்னர் அருள் தெய்வம் வானொலியாக 'சீவ' என்று வாழ்த்தியது. அதனால் பின் அக்குழந்தைக்குச் சீவகன் என்று பெயரிட்டனர். சீவகனின் வரலாற்றை மையமாகக் கொண்டதால் சீவக சிந்தாமணி என்று இந்நூல் பெயர் பெற்றது.

நூலாசிரியர் : சீவக சிந்தாமணி என்னும் காப்பியத்தைப் படைத்தவர் திருத்தக்க தேவர். சோழர் குலத்தில் அரச மரபைச் சார்ந்தவர். சமண சமயத்தைச் சார்ந்தவர். துறவியர் மரபினர். இவருடைய காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு ஆகும். சமணத் துறவிகள் அறக்கருத்துக்களை சுவைபடப் பாடுவதின்றி இன்பச் ~~சுவையை~~ப் பாடவும் வல்லவர் என்பதனை நிறுவும் பொருட்டு இந்நூலை இயற்றினார் திருத்தக்க தேவர். இவர் பாடிய மற்றொரு நூல் நரிவிருத்தம். இத்தகு சிறப்புக் கொண்ட திருத்தக்க தேவரைத் 'தமிழ்க் கவிஞர்களுள் சிற்றரசர்' என்று வீரமாமுனிவர் பாராட்டுகின்றார். வேறுபெயர்கள் : திருத்தகு முனிவர், திருத்தகு கொமுனிவர், திருத்தகு மகாமுனிவர் என்னும் பெயர்களாலும் அழைக்கப்படுவார்.

நூல் கதைச் செய்தி : சச்சந்தன் விசயை என்போர் சீவகனின் பெற்றோர் ஆவர். கட்டியங்காரன் என்னும் அமைச்சன் ஆட்சியை

முறைகள். மனித இன மேம்பாட்டிற்குத் தேவையான அறக்கருத்துகள் சிறந்த முறையான பல செய்திகளைக் கொண்டதாக இந்நூல் விளங்குகின்றது. சீவகன் தன் ஆற்றலால் எட்டுப் பெண்களைத் திருமணம் செய்து கொள்கின்றான். இதனால் இந்நூலுக்கு 'மணநூல்' என்ற பெயரும் உண்டு. தி. தேவர் தம் நூலுக்கு 'சிந்தாமணியின் சரிதம்' என்று பெயரிட்டார். சிந்தாமணி ஒரு சமயக் காப்பியமாகும். வடமொழியில் உள்ள கத்திய சிந்தாமணி, க்ஷத்ர சூடாமணி, ஸ்ரீபுராணம் ஆகிய நூல்களில் சீவகன் கதை காணப்படுகின்றது. அவற்றைத் தழுவி தமிழில் சீவக சிந்தாமணி என்னும் பெருநூலைத் தந்துள்ளார் திருத்தக்க தேவர்.

விமலையார் இலம்பகம்:-

சீவக சிந்தாமணியில் எட்டாம் உட்பிரிவாக விமலையார் இலம்பகம் இடம்பெற்றுள்ளது. இவ்விலம்பகத்தில் 106 விருத்தப் பாடல்கள் அமைந்துள்ளன.

கதைச் சுருக்கம்! சீவகன் பலவகை மாலைகளையும் வென்ற சேனையும் உடையவன். அவன் தம்பி நந்தட்டன். சீவகன் ஒரு மாமணி! அவனைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்! என்று நண்பன் பதுமனிடம் கூறினான். பிறகு ஏமமாபுரத்திலிருந்து குதிரை மீதேறி சீவகன் தன் தோழர்களும், மறவர்களும் புடைசூழ தன் தாய் விசயை தவசியருக்கும் காட்டில் உள்ள தவப்பள்ளிக்குச் சென்றான். அங்கு விசயை வைகறையில் கண்ட கனவு நனவாகும்படி நேரில் மகனைக் கண்டாள். சீவகன் தன் தாயின் காலில் விழுந்து வணங்கினான். விசயை தாயன்பு மகிழ்ச்சியாக ஆனந்தம் கொண்டாள். பின்னர் தன் மகனுக்கு அரசர் மேற்கொள்ள வேண்டிய நெறி முறைகளையும், பகைவரை வென்றுக் கொள்ள வேண்டிய ஒழுக்க யாவையும் தெளிவாக எடுத்துக் கூறினாள்.

விசயை, தன் நாட்டைக் கைப்பற்றிய கட்டியங்கார[illegible] கொல்லத் தாய்மாமன் கோவிந்தனைத் துணையாகக் கொள்ளும்படி மகனைப் பணித்தாள். பின்னர்ச் சீவகன் விசயையைத் தன் மாமனாகிய கோவிந்தனின் இருப்பிடத்திற்கு அனுப்பினான். பின்பு, சீவகன் தன் தோழர்களுடன் புறப்பட்[illegible] ஏமாங்கத நாட்டிலுள்ள இராசமாபுரத்தை அடைந்து நகரப் புறத்தேயுள்ள ஒரு சோலையில் தங்கினான். மறுநாள் காலையில் சோலையிலேயே நண்பர்களை இருக்கச் செய்து விட்டுத் தான் மட்டும் வேறு உருவில் நகருக்கு[illegible] சென்றான். அந்நகரத்தின் சாகரதத்தன் என்னும் வணிக[illegible] மகள் விமலை ஆவாள். அவள் பந்தாடுவதில் [illegible] அவளது அழகும் விளையாட்டும் சீவகனது மனத்தை மயக்கின. சீவகனும் அவளை மறக்க முடியாதவனாய் அவள் தந்தையின் கடையருகே வந்து நின்றான்.

புறத்தேயுள்ள ஒரு சோலையில் தங்கினான். மறுநாள் காலையில் சோலையிலேயே நண்பர்களை இருக்கச் செய்து விட்டுத் தான் மட்டும் சேமமாபுர நகருக்குள் சென்றான். அந்நகரத்தின் சாகரதத்தன் என்னும் வணிகனின் மகள் விமலை ஆவாள். அவள் பந்தாடுவதில் வல்லவள். அவளது அழகும் விளையாட்டும் சீவகனது மனத்தை மயக்கின. சீவகனும் அவளை மறக்க முடியாதவனாய் அவள் தந்தையின் கடையருகே வந்து நின்றான்.

சீவகன் கடையருகே வந்தவுடன், விலைபோகாமல் நெடுநாள் தேங்கிக் கிடந்த பொருள்கள் எல்லாம் விலை போயின. அது கண்ட சாகரதத்தன் சீவகனை நோக்கி, அன்போடு வரவேற்றான். "முன்பு ஒரு சோதிடன், 'உன் மகளுக்குரிய கணவன், உன் கடைக்கு வாங்க வருவான். அப்படி அவன் வாங்க வந்ததும் உன் கடையில் விற்காது கிடந்த பழஞ் சரக்கு எல்லாம் விற்று முதலாகும்' என்று அவள் பிறந்த போதே பயனைச் சாதகத்தில் குறித்திருந்தான். இன்று நீ என் கடையருகே வந்து நின்றதும் என் சரக்கெல்லாம் விற்றுத் தீர்ந்தன. எனவே நீ தான் அச்சோதிடன் கூறிய என் மகள் விமலைக்கேற்ற கணவனாவாய்" என்று கூறி அவனைத் தன் மனைக்கு அழைத்துச் சென்று விமலையைத் திருமணம் செய்து கொடுத்தான். சீவகன் விமலையோடு கூடி இரண்டு நாள் இன்புற்று இருந்த பின் தன் தோழர்களை அடைந்தான்

இப்பகுதி விமலைக்குத் திருமணம் நடந்த விதம் பற்றி உணர்த்துகின்றது.

1. சிந்தாமணி : ஒளி கொடாத ஒருவகை மணி
2. சீவகசிந்தாமணியை மணநூல் என்றழைக்கக் காரணம் :-
சீவகன் எண்மரைத் திருமணம் செய்து கொள்ளும் வரலாற்றை விரித்துரைக்கும் நூலாதலால் 'மணநூல்' என்று அழைத்தனர். வே. பெ. காமநூல், முக்திநூல்.
3. சீவக சிந்தாமணி தோன்றுவதற்குக் காரணமாக அமைந்த முதல் நூல்கள் 1, கத்திய சிந்தாமணி, சத்திர சூடாமணி, ஸ்ரீபுராணம்.
4. சீவகனின் தாய் மாமன் - கோவிந்தன்.
5. விமலை கண்ட கனவு - விமலை வருங்கணவனாம் சீவகனை நேரில் காண்பது போல் கனவு கண்டாள்.
6. விமலை என்பாள் யார்; சாகரதத்தனுக்கும், கமலைக்கும் பிறந்த மகளே விமலை ஆவாள்.
7. விமலை பயின்ற விளையாட்டு : பந்தாடுதலில் திறன் பெற்றிருந்தாள்
8. சோதிடன் கணித்துக் கூறியது என்ன?
விமலை பிறந்த பொழுது அவள் தந்தை சாகரதத்தனிடம் இம்மங்கைக்குரிய மணவாளன் உன் கடைக்கு வரும் போது, இவ்வளவு காலமாய் தேங்கிக் கிடந்த சரக்குகளெல்லாம் விற்கும் என்று சோதிடன் கணித்துக் கூறினான்.
9. விமலை பந்தாடும் திறன் :- விமலை ஒரே நேரத்தில் இரு கைகளிலும் ஐந்து பந்துகளை விடாமல் பந்தடிக்கும் திறமையுடை

அலகு - 1

# பெரிய புராணம்

## இளையான்குடி மாற நாயனார் புராணம்

குலம் : வேளாளர்
பூசை நாள் : ஆவணி மகம்

பிறப்பு :- இளையான்குடி மாற நாயனார் 63 நாயன்மார்களுள் ஒருவராவார். இவரது அவதாரத் தலம் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையான்குடி ஆகும். முக்தித் தலமும் இதுவே ஆகும்.

இளையான்குடி என்னும் இயற்கை எழில் கொஞ்சும் ஊரில் உலக மாந்தர்க்கு உணவளிக்கும் வேளாளர் குலத்தில் அவதரித்தார் மாறனார். இளையான்குடியில் பிறந்த காரணத்தினால் இளையான்குடி மாறநாயனார் என்று அழைக்கப்பட்டார். பெரும் செல்வங்களை உடைய மாறனாருக்கு வயல் வெளிகளும் நிறைய இருந்தன. சிவபக்தியின் சிறந்து விளங்கிய மாறனார் எந்நேரமும் எம்பெருமானது திருநாமத்தை மனதில் எண்ணி அவன் அடியார்களுக்கு விருந்தோம்பல் செய்வதைத் தம் தொண்டாக செய்து வாழ்ந்து வந்தார். தம் இல்லம் தேடி வரும் அடியார்களை சிவபெருமானைக் கருதி இருக்கையில் அமர்த்தி அவர்களுக்கு பாத பூஜை செய்து வணங்கி அடியார்களுக்கு திருவமுது செய்து வந்தார். நாள்தோறும் செய்த மகேசுவர பூஜை என்னும் சிவபுண்ணியத்தால் அவரது செல்வம் நாளுக்கு நாள் பெருகிக் குபேரனைப் போன்ற பெரும் செல்வந்தராக வாழ்ந்து வந்தார்.

## அடியார்க்குத் தொண்டு செய்தல்

அடியார்க்குத் திருவமுதளித்தலாகிய இத்திருப்பணியைச் செல்வக் காலத்திலே மட்டுமின்றி வறுமையுற்ற காலத்திலும் விடாது செய்து வந்தார் இந்நாயனார் என்னும் உண்மையினை உலகத்தார்க்கு அறிவுறுத்த இறைவன் திருவுள்ளங் கொண்டார். இதனால் இளையான்குடி மாறனாரின் செல்வம் குறைந்து வறுமை உண்டாகியது. இவ்வாறு செல்வம் சுருங்கினாலும் தம்மிடமிருந்த நிலங்கள் முதலியவற்றை விற்றும், கடன் வாங்கியும் அடியார்க்கு அமுதளிக்கும் பணியை மாறாது செய்து வந்தார்.

## சிவபெருமானின் அருள்! —

இவ்வாறு மாரிக் காலத்தில் ஒரு நாள், தாம் உணவின்றிப் பசியால் வாடிய போதும் இரவு வெகுநேரம் வரை சிவனடியார்களை எதிர்பார்த்திருந்து எவரும் வராமையால் கதவைப் பூட்டி விட்டு வீட்டினுள் சென்றார். நள்ளிரவுப் பொழுதிலே சிவபெருமான், அடியார் கோலங் கொண்டு இவரது மனைக்கு எழுந்தருளிக் கதவைத் தட்டி அழைத்தார். இவர் கதவைத் திறந்து அடியாரை வீட்டினுள் அழைத்து வரவேற்று மழையில் நனைந்த அவரது மேனியில் விழும் ஈரத்தை துவட்டச் செய்து ஆசனத்தில் அமர்த்தினார். — அடியார்க்கு உணவளிக்க வீட்டில் எதுவுமில்லையே என வருத்தம் மிகுந்து: சிறிது பொழுதுகள் சூடாக உணவளிக்கிறேன் என்று கூறினார்.

இந்நிலையிலும் தனக்கு வந்த சோதனையை எண்ணி மனம் தளராமல் மனைவியிடம் அடியாரின் பசியைப் போக்குவது பற்றி உரையாடினார். அந்நேரம் அவரது மனைவி, கழனியில் காலையில் விதைத்த நெல்லை எடுத்து வந்து அதை அரிசியாக்கி அடியாருக்கு உணவு அளிக்கலாம் எனக் கூறினார். இவரும் மழையைப் பொருட்படுத்தாமல் கழனியிலிருந்து நெல்லை எடுத்து வந்தார். இவர் மனைவி தோட்டத்தில் இருந்த கீரையை பறித்து அவ்வீட்டிற்கு ஆதாரமாக விளங்கிய வீட்டின் சிதைவடைந்த கூரையிலிருந்து மரக்கட்டைகளைப் பயன்படுத்தி வந்து சூடாக உணவு சமைத்தார். பிறகு அடியாரை உணவருந்த அழைத்து அவரை வணங்கி எழுந்த போது அடியாரைக் காணவில்லை.

அப்பொழுது அடியாராக வந்திருந்த சிவபெருமான் ஜோதிப் பிழம்பாய் எழுந்து தோன்றினார். அது கண்டு இருவரும் திகைத்து நின்றனர். சிவபெருமான் உமா தேவியாருடன் எருதின் (ரிஷப வாகனத்தின்) மேல் தோன்றி, 'அன்பனே! நீ உன் மனைவியோடும் என் அன்பர் பூசை அளித்த சிவலோகத்தினை அடைந்து பெரும் உன்னதமாகிய ... இருப்பாயாக" என்று அருள்

மாலையில் குகனின் சிருங்கிபேரபுரம் எனும் ஊரில் தங்கினர். அன்று இரவு இராமர் முதலானவர்களுக்கு உண்பதற்கு குகன் தேனும் மீனும் வழங்கி உபசரித்தார். மறுநாள் காலையில் கங்கை ஆற்றைக் கடப்பதற்கு குகன் தனது படகில் சீதை மற்றும் இராம இலக்குமணர்கள் ஆகியோரை அமரவைத்து கங்கை ஆற்றின் மறுகரை வரை படகோட்டி சென்றார்.

பின்னர் இராமர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குகன் சித்ர கூடம் செல்லும் வழியை கூறினார் இதனால் இராமருக்கு குகன் உற்ற தோழன் ஆனார்.

வனவாசம் சென்ற இராமரை காண்பதற் கங்கை ஆற்றின் கரைக்கு வந்த பரதன் முதலானோர்க்கும் கங்கை ஆற்றை கடக்க குகன் படகுகளையும், படகோட்டிகளையும் தந்து உதவினார்.

## குகப்படலம்

வனம் புகுந்த இராமன் குகனைத் தோழனாக கொண்ட செய்தியை உணர்த்தும் பகுதியாதலின் குகப்படலம் எனப் பெயர் பெற்றது.

குகன் கையுறை யேந்தி இராமனைக் காண வருதலும், இலக்குவன் மூலம் இராமனது அழைப்புப் பெற்று அவனைக் காணுதலும். கையுறைப் பொருளும் தருதலும், தேனும் மீனுமாகிய அவற்றை அன்பினால் இராமன் ஏற்றுக் கொள்ளுதலும்.

310 30044336

மறுநாள் நாவாயுடன் வருக என்ற இராமன் வார்த்தையை அவனுக்கு திண்மைத் துன்பம் நோக்கிக் கசிந்த மனத்தனாய் மறுத்து குகன் அங்கேயே இருந்தும் அன்றிரவெல்லாம் கண் விழித்து நின்ற நேரம் காலைக்கடன் முடித்த இராமன் ஆணையின் வண்ணம் நாவாய் கொண்டுவராது இராமனைத் தன் சிருங்கிபேர நகரிலேயே தங்க வேண்டுதல் இராமன் மீண்டு வரும்போது குகனிடத்திற்கு வருவதாகக் கூற அதனை ஏற்று குகன் நாவாய் கொணர . மூவரும் ஏறக் கங்கை கரையைக் கடந்ததும், சித்திரகூடத்திற்கு வழி வினாவிய இராமனுக்குத் தன்னையும் உடன் அழைத்துக் கொண்டு செல்ல வேண்ட இராமன் குகனை அவனது உறவுகளுடன் இருக்க பணிக்க குகன் விடைபெற மூவரும் வனத்தில் செல்வதும் ஆகிய செய்திகள் இதனுள் இடம் பெறுகின்றன.

இராமன் வனவாசம் செல்ல பலரும் உதவுகின்றனர். அதில் சிறந்த உதவி செய்தவன் குகன்தான். கங்கைக்கரைக்கு (வந்தவுடன்) கங்கை கரையை கடக்க உதவி செய்து அன்பனாகவும், மரியாதையானவனாகவும், பக்தியானவனாகவும், இராமனுக்கு சகோதரன் ஆகும் பேற்றை பெறுகிறான் குகன்

வளமும் வாழ்க்கையைப் பெற்றவன். பொய் நீங்கிய மனத்தினன். இராமனிடம் அன்பு கொள்ளும் நினைத்தினன்., யானைக் கூட்டம் போன்ற சுற்றத்தினைப் பெற்றவன். ஆயிரம் ஓடங்களுக்கு தலைவன். தூய கங்கையாற்றின் ஆழம் அளவு உயர்ந்தவன். வேட்டைக்குத் துணையாக நாயினை உடையவன். துடி, ஊதி, கொம்பு, துந்துபி முதலான இசைக்கருவிகள் நிறைந்த படையை உடையவன் என்பதனைத் தம் பாடலால் புலப்படுத்துகின்றார். (1, 2, 3, 4)

இராமனை சந்தித்தல்:

இத்தகு தோற்றமும், பண்பும் உடைய குகன் கங்கையாற்றின் கரையில் அமைந்திருந்த தவப் பள்ளிக்கு இராமன் வந்துள்ளான் என்ற செய்தி அறிந்து பார்க்கச் சென்றான். தனது படைகளையும் சுற்றத்தாரையும் விட்டுத்தான் மட்டும் தனியாக இராமனைக் காண்பதற்காகத் தேனையும், மீனையும் ஒருங்கே காணிக்கையாகக் கையில் எடுத்துக் கொண்டு சென்றான்

" ஒருங்கு தேனொடு மீன் உபகாரத்தின்
இருந்த வள்ளலைக் காண வந்து எய்தினன்

1. வேடவர் குலத்தில் சிறந்த தலைவனாக விளங்குபவன். போராற்றலும், பேராற்றலும் மிக்கவன் என்பதை புலப்படுத்துகிறது.

இலக்குவன் மேலாக குகனின் இயல்பும் சிறப்பும் கூறுவதனை உணரமுடிகிறது.

குகனின் பணிவுடைமை:

இராமன் பணிவுடன் வணங்கிய குகனைத் தன்னிடத்தில் இரு அழைத்து அமரும்படி கூறினான். ஆனால் குகன் அமரவில்லை. அளவு கடந்த அன்பை வெளிப்படுத்தும் குகன் இராமனை நோக்கி தங்களுக்கு உணவாக அமையும்படி தேனையும், மீனையும் பக்குவப்படுத்திக் கொண்டு வந்துள்ளேன். தங்களுடைய எண்ணம் யாதோ? என்று கேட்டான்.

"இருத்தி..... – இப்பாடலில் குகன் கொண்டு வந்த பொருள் தேன், மீன் மட்டுமல்ல, உயர்ந்த அன்பினையும் கொண்டுவந்துள்ளான் என்பது அறியமுடிகிறது.

இராமன் சுற்றத்தவர்களாகிய முனிவர்களை நோக்கிப் புன்னகைத்து வாட்டு, குகனே! நீ அன்போடும், பக்தியோடும் கொண்டுவந்த தேனும், மீனும் மிகவும் அருமையானவை. அமுதத்தை காட்டிலும் சிறந்தவை. இவையெல்லாம் எம்மைப் போன்றவர் ஏற்கத் தக்கவையே ஆதலால் நாம் அவற்றை இனிதாக உண்டவர் போல

அரியநாம் - எனும் பகுதியின் வழியாக நாம் கொள்ளும் பொருள்களைவிட மிகவும் பெரியது நாம் அவர்களிடத்தில் காட்டும் மதிப்பும், பணிவும் என்பது இதன் வாயிலாக அறிய முடிகிறது. உண்ணத்தக்கப் பொருள்களை அன்போடு தந்தால் பெரியோர்கள் ஏற்றல் வேண்டும் என்பதை இராமனின் பெருந்தன்மையின் மூலம் அறியமுடிகிறது.

நாளை வா எனக்கூறல் :

இராமன் இதனை நோக்கி நாம் இன்று தவச்சாலையில் தங்கி நாளை கங்கையை கடப்போம் எனவே நீ அன்பு நிறைந்த உன் சுற்றத்தாரோடு இனிதே இருந்து காலை உன்னுடைய நகரத்திலே உவகையோடு தங்கி விடியற்காலையில் நாங்கள் பயணம் கொள்வதற்கான ஓடத்துடன் இங்கு வருக என்றான்.

போந்தும் இன் ... - இப்பகுதியின் மூலம் தவச்சாலையில் தவநெறி கொண்டவரை இருத்தல் வேண்டும் என்பதை அறியமுடிகிறது.

குகனின் விருப்பம் :

கார்மேக வண்ணனாகிய இராமனின் காரியதை பேரன்புடைய குகன் இவ்வுலகம்

# வில்லிபாரதம்

வடமொழியில் வேதவியாசர் எழுதிய பாரதம் வியாச பாரதம். அளவில் பெரியதாயிருப்பதுடன், பொருண்மையிலும் முதன்மை பெற்றிருப்பது நோக்கி இதனை 'மகாபாரதம்' என அழைத்தனர். பரதனுடையை வழி வந்தவர்களின் வரலாறு பற்றிப் பேசும் நூல் ஆதலால் 'பாரதம்' எனப் பெயர் பெற்றது. பரதன் வழி வந்தவர்களே பாண்டவர்களும் கௌரவர்களும் ஆவர். மகாபாரதத்தைப் பாடிய வேதவியாசர் இவர்களின் குல முதல்வர் ஆவார். பாரதம் 'ஐந்தாம் வேதம்' எனவும் அழைக்கப்படுகின்றது.

## வில்லிபாரதம்

பண்டைத் தமிழ்ப் புலவர்களைக் கவர்ந்த கதை பாரதக் கதை. பாரதக் கதை பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களிலும் காணப்படுகின்றன.

வியாசர் எழுதிய பாரதத்தைப் பலர் தமிழ்ப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். அருணிலை விசாகர் என்பர் பாரதத்தைத் தமிழ்ப்படுத்தியதாக மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டுக் கூறுகிறது. சங்ககாலப் பாடல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று அழைக்கப் படுகின்றார். ஆனால் அவர் பாடிய பாரதம் கிடைக்கவில்லை. அவருடைய காலம் கி.பி.6ஆம் நூற்றாண்டு என்பர். அதன்பின் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் (கி.பி. 9ஆம் நூற்றாண்டில்) 'பாரத வெண்பா' என்றொரு நூல் தோன்றியது. அந்நூல் முழுமையும் கிடைக்கவில்லை. 12,000 பாடல்கள் கொண்ட

ஆலோசனைப்படித் தங்கள் சார்பில் உலூகன் என்னும் பெயருடைய அந்தணனைத் திருதராட்டிரனிடம் தூதாக அனுப்பினர். உலூகன் சென்ற தூதையும் அதன் காரணமாக ஏற்பட்ட விளைவையும் கூறும் பகுதி இதுவாகும்.

**உலூகன் தூதுச் சருக்கம்**

**கடவுள் வாழ்த்து**

இச்சருக்கத்தின் முதல் பாடல் திருமால் வாழ்த்தாக அமைந்துள்ளது. திருமாலின் ஏழு அவதாரங்கள் இதில் சொல்லப்பட்டுள்ளன. மச்சாவதாரம் ஆகியும், கூர்ம அவதாரம் ஆகியும், மகாமேரு மலையை ஒரு பரற் கல்லைப் போலத் தன் கொம்பிடத்தே கொள்ள்வல்ல பன்றி அவதாரம் ஆகியும், நரசிம்ம அவதாரம் ஆகியும், வாமன அவதாரம் ஆகியும், கோடரிப்படை கொண்ட பரசுராம அவதாரம் ஆகியும், அரக்கரைக் கொலை செய்த இராம அவதாரம் ஆகியும் நின்ற திருமால் மலரடியை என்றும் மறவேன்.

**ஏழு அவதாரங்கள்**

திருமால் வேதங்களை மீட்கும் பொருட்டு மீன் வடிவம் தாங்கினார். வில்லி இதனை 'மீனம்' எனக் குறிப்பார். இது வட மொழியில் மச்சாவதாரம் என அழைக்கப்படுகின்றது.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்த காலத்துத் திருமால் மேருமலையைத் தாங்குவதற்காக ஆமை வடிவம் எடுத்தார். வில்லி இதனைக் 'கமடம்' என்பார். இதுவே கூர்மாவதாரம் எனப்படும்.

இரணியாட்சனால் மறைத்து வைக்கப்பட்ட பூமியை மீட்கும் பொருட்டுத் திருமால் பன்றி வடிவம் எடுத்தார். வில்லிபுத்தூரார் இதனை 'மேருவை ஏடுக்கும் தாள் ஏனம்' எனக் குறித்துள்ளார். இதுதான் வராக அவதாரம் ஆகும்.

இரணியனை அழிக்கும் பொருட்டுத் திருமால் எடுத்த அவதாரம். இதனை வில்லிபுத்தூரார் 'நரஅரி' என்று குறிப்பார்.

மகாபலியிடம் மூன்றடி மண் தானம் பெறுவதற்காகத் திருமால் எடுத்த அவதாரம் வமனாவதாரம் ஆகும். இதனை ஆசிரியர் 'அருங்குறள்' என்பர்.

6. தந்தை சொல்லை நிலைநாட்டத் திருமால் எடுத்த அவதாரம் பரசுராம அவதாரம். வில்லிபுத்தூரார் இதனை 'மழு தரித்த கோ' எனக் குறிப்பார்.

7. திருமால் அவதாரங்களுள் முழுமை பெற்ற அவதாரம் இராம அவதாரம் ஆகும். இதனை வில்லிபுத்தூரார் 'அரக்கரைக் கொலை செய்த வானநாயகன்' என்பார்.

**கண்ணன் போன்றோரின் எண்ணங்கள் (2-4)**

பாண்டவர்கள் சூதினால் தாங்கள் இழந்த நாட்டை மீட்பதற்காக 'உவப்பிலாவியம்' என்ற நகரில் கூடி ஆலோசனை செய்தனர். கண்ணன், பலராமன், சாத்தகி போன்றோரும் மற்றும் உள்ள நண்பர்களும் கூடினர். அப்பொழுது கண்ணன் கூறியதாவது; 'துரியோதன் சூதாட்டத்தினால் கவர்ந்த நாட்டை மீண்டும் சூதாட்டத்தினால் கவர்வதே சிறந்தது; போர் செய்து திரும்பப் பெறுதல் என்பது நீதியாகாது; எனவே துரியோதனன் கருத்தை அறிய அவன் வாய்மொழியால் அறிந்து கொள்ளத் தூதுவன் ஒருவனை அனுப்பலாம் என்று கூறினான்.

கண்ணன் கூறியதைக் கேட்ட அவன் அண்ணன் பலராமன், 'பலரும் காணுமாறு சூதினால் தருமனை வென்று அவன் நாட்டைப் பல ஆண்டுகள் ஆட்சி செய்தவன் துரியோதனன்; வலிமையின் மூலம் மீண்டும் அந்த நாட்டைப் பெற வேண்டும் என்பது தீய அறிவின்பாற் பட்டதாகும்' என்று கூறினான். இவர்கள் இருவரும் கூறியதைக் கேட்ட அவர்கள் தம்பி சாத்தகி கீழ்வருமாறு கூறத் தொடங்கினான். 'பலராமனின் மேனி வெண்மை நிறம் உடையது. அவன் இதயமோ கருமை நிறம் உடையது; எனவே அவன் வாயிலிருந்து வரும் சொல் அவன் மேனியைக் காட்டிலும் வெண்மையானது' என்று சாத்தகி பலராமன் கருத்தை மறுத்த தோடல்லாமல் அவனை விமர்சிக்கவும் செய்தான்.

**உலூகனைத் தூதனுப்ப முடிவெடுத்ததும், தூது செல்லலும் (5-12)**

ஓர் உரலுடன் தவழ்ந்த கண்ணன் தன் கருத்தைக் கூறத் தொடங்கினான்: 'குதிரைகள் பூட்டிய வலிய தேர்களையும், பெரிய உரல் போன்ற கால்களைக் கொண்ட யானைகளையும் உடையவன் திருதராட்டிரன்; அவனிடம் உலூகனைத் தூது அனுப்புவோம்; அவன் சென்று பாண்டவர் கருத்தைக் கூறிக் கௌரவர்களின் கருத்தை அறிந்து

அந்தகனிடம் கூறியபின், அவன் உன் நாட்டைத் தர மறுத்தால் எங்களுக்குச் செய்தி அனுப்புக' என்று கூறிச் சென்றார்கள். மன்னர்கள் சென்ற பின் தருமன் உலூகனை அழைத்தான். அவனிடம் 'நீ அத்தினாபுரம் செல்; அங்கு எம் பெரியதந்தை திருதராட்டிரன், பீஷ்மர், விதுரன், துரோணர் போன்ற பெரியோர்களுக்கு எங்களது வணக்கத்தைக் கூறு; பின் எங்கள் தூதுச் செய்தியையும் உரியபடி கூறி வருக' என்றான்.

தூது செல்லும் பொறுப்பை ஏற்ற நான்மறைப் புரோகிதன் உலூகன் அத்தினாபுரம் சென்றான்; திருதராட்டிரன் அவையை அடைந்தான்; திருதராட்டிரன் அவனை வரவேற்று வணங்கி ஆசனத்தில் அமரச் செய்தான். மலை போன்ற தோளுடைய பீஷ்மர் முதலியோர் உலூகனை வணங்கினர்; பின் வந்த காரியத்தை உரைத்தருளுமாறு வேண்டினர். திருதராட்டிரனும் அவன் மைந்தர்களும், கர்ணனும் சகுனியும் மனம் கொதிக்கும்படி உலூகன் தான் வந்த தூதுச் செய்தியைக் கூறினான்.

உலூகன் கூறிய தூதுச் செய்தி

பாண்டுவின் மக்கள் ஐவரும் 12 ஆண்டுகள் காட்டிலும், ஓராண்டு மறைந்திருந்து வாழ்ந்தும் தற்போது வெளிப்பட்டுள்ளனர். சூதினால் கவர்ந்து கொண்ட அவர்கள் நாட்டை நீங்கள் ஒப்புக் கொண்டவாறு தரப்போகின்றீர்களா, இல்லையா? என்று முனிவன் கேட்டான்.

அன்னங்களும் மயில்களும் ஒன்றாகச் சேர்ந்து குளத்தில் விளையாடும் நல்ல நாட்டையுடையவர்களே! முன்னர் நீங்கள் மோது போர் கருதாமல் செய்த போர் சூதுபோர் ஆகும். உங்கள் எண்ணப்படி நாட்டைத் தராமல் சூதுபோர் செய்ய வேண்டுமானால் அதையாவது செய்யுங்கள். அதுவே தக்கது அவ்வாறு சூது போர் செய்து வென்றால், இனி வேறுபாடும் உண்டாகாது. உங்கள் செல்வ வாழ்வும் முன்பு போலப் பெருமை பெறும் என்று உலூகன் கூறினான்.

அல்லது அழிவினைக் கருதாமல் வெற்றியையே நினைத்து நீங்கள் அவர்களுடன் போரிடுவோம் என எதிர்த்தால் உங்களால் வெற்றி பெற இயலாது; சினங்கொண்டு வீமனும் விசயனும் களம் புகுந்தால் நீங்கள் அனைவரும் அழிதல் உறுதி; முனிவன் சொல் பொய்க்காது என்றான்.

### துரியோதனனின் மறுமொழி 13

(உலூகன் கூறிய தூதுச் செய்தி கேட்ட துரியோதனன் சினம் கொண்டான். 'இன்று பூனையைப் போல் இருக்கும் இடத்திலிருந்து பேசுவது வீரமன்று; நடைபெறவிருக்கும் போரில் ஆண்மையும் தோள்வலியும் உடையவர் யாரென்று காணலாம்' என்று கூறினான் மேருமலைகளைப் போன்ற தோள்களையுடைய துரியோதனன்.

### விதுரனின் நல்லுரை (14)

கல்வியும் தூய நெஞ்சும் இல்லாத துரியோதனன் கூறிய மொழி கேட்டு விதுரன் எழுந்தான். 'இந்த வேதியன் சொற்படிப் பூமியைக் கொடுத்து விடு, தாழ்ந்த அறிவிலிகள் சொல்லைக் கேட்டு மறுப்பாயானால், திருமகள் உன்னை விட்டு விலகி விடுவாள்; உன் சுற்றமும் படையும் கெடும்' என்று விதுரன் கூறினான்.

### துரோணரும் கிருபாச்சாரியாரும் நல்லுரை வழங்கல் (15)

இவர்கள் இருவரும் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஆசிரியர்கள்; அவர்கள் துரியோதனனிடம் கூறியதாவது. 'உலூகன் கூறிய தூதுச் செய்தியை ஏற்க மறுத்து சேனையும் வலிமையும் கொண்டு நீ பாண்டவர்களுடன் போர் செய்ய எண்ணுதல் பெரும் பிழை; போர் செய்தாய் என்றால் விசயனின் வில், தைத்த இடம் எங்கும் குருதி வெளிப்படும்படிச் சரங்களைச் செலுத்தும்' என்று துரோணரும் கிருபரும் கூறினார்கள்.

### பீஷ்மரின் அறிவுரை (16)

பீஷ்மர், திருதராட்டிரனின் பெரிய தந்தை ஆவார். எனவே அவர் திருதராட்டிரனைப் பார்த்து, 'காடு சென்ற வாழ்ந்து வந்த உன் மைந்தர்களான பாண்டவருக்கு நாம் வரையறை செய்த காலம் கழிந்தது; இன்னும் அவருக்குரிய நாட்டைக் கொடுக்க மறுத்துப் போர் புரிய நினைப்பது தவறு; அப்படி ஒருவேளை போர் ஏற்பட்டால் வளைந்த வில்லினையுடைய அருச்சுனனுக்கு எதிராக வில் வளைக்கக் கூடியவர்கள் யாருமில்லை' என்று வெகுண்டு கூறினான்.

### கர்ணனின் சினம் (17)

இருக்கும் போது நீ செய்த எந்த வீரச் செயலால் இவ்வாறு பேசுகிறாய்' என்று சினம் பொங்கக் கூறினான்.

### பீஷ்மர் கர்ணனை இகழ்தல் (18,19)

சிறுவனான கர்ணன் தன்னை இகழ்ந்ததை பீஷ்மரால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. கர்ணன் பாண்டவர்களோடு மோதிய காலத்தில் அவன் தழுவிய தோல்விகளைப் பீஷ்மர் நினைவூட்டினார்.

1. திரௌபதி சுமய்வர நாளில் அருச்சுனன் மச்ச எந்திரத்தை அறுத்தான்; அப்போது அவனுக்கு எதிராக வில்லில் நாணேற்றிப் போரிட்ட கர்ணன் தோற்றான்.

2. துரியோதனனைக் கந்தருவர் சிறைப்பிடித்துச் சென்றனர்; கந்தருவரை வென்ற துரியோதனனை வீமன் சிறை மீட்டான்; அப்போது நீ வீமனுடன் போரிட்டுத் தோற்றாய்.

3. விராட நாட்டு ஆநிரைகளை நீங்கள் கவர்ந்தீர்கள்; தேரோட்டுவதில் போதிய பயிற்சி இல்லாத உத்தரன் தேரோட்ட அருச்சுனன் நிறை மீட்க வந்தான்; அப்பொழுது நடைபெற்ற போரிலும் நீ பின்னிட்டுச் சென்றாய்; நாளைக் கண்ணன் தேரோட்ட நால்வகைப் படைகளுடன் அவர்கள் எதிர்க்கும்போது நீ எவ்வாறு அருச்சுனனை வெல்வாய்' எனப் பீஷ்மர் கர்ணனை இகழ்ந்து கூறினார்.

### துரியோதனன் மறுமொழி (20)

பாம்புக் கொடியை உடைய துரியோதனன் பீஷ்மர் கூறிய நல்லுரைகளை ஏற்க மறுத்தான்; கர்ணன் கூறியவற்றை அன்புடன் ஏற்றான்; அவையிலிருந்த முனிவனாம் உலூகனை இகழ்ந்து அவமதித்தான்; பின் முனிவனிடம் இந்தப் பூமி எங்களுடையது; பாண்டவர் வசித்த காடும் எங்களுடையதே' என்று கூறினான். உலூகனும் அத்தினாபுர நிகழ்ச்சிகளைப் பாண்டவர்களிடம் கூறினான்.

### அருச்சுனனைக் கண்ணன் அழைத்தல் (21)

உலூகன் அத்தினாபுரத்தில் நிகழ்ந்தவற்றை எல்லாம் தருமனிடம் கூறினான்; பின் துவாரகை சென்று கண்ணனிடம் கூறினான். கண்ணன் மகிழ்ந்தான். விசயனை விரைவில் இங்கு

அலகு - 2

# சீறாப்புராணம்

## விலாதத்துக் காண்டம்

## கள்வரை நதிமறித்த படலம்

### <u>நபிபெருமானும் மற்ற வியாபாரிகளும் :</u>

வட்ட வடிவமுடைய சூரியன் சிவந்த பிரபையானது எல்லாவிடமும் பரவ நித்திரை செய்தவர் எழுந்திரிய நபி பெருமானும், மற்ற வியாபாரிகளும் எழுந்து, காலை. தாமரை நிற்கும் இதழ்களும், மொட்டுக்களும் பரவாவடும்படி வாசனையானது உலாவப்பெற்ற அந்தச் சோலையை விட்டு நீங்கி அரிதாகிய பாதையை அடைந்து மாறுபட்ட வெவ்விய கோபத்தையுடைய யானையைப் போல ஆரவாரங்களோடு நெருங்கி நடந்து சென்றனர்

அவ்வாறு நடந்து சென்ற அவ்வியாபாரிகள் அனைவரும் சிறிய மலைகள் நெருங்கி காடுகள் கொண்ட பாதையைப் பொருந்தி உயர்ந்த பருக்கைக் கற்கள் பரவிய பாலை நிலங்களைக் கடந்து சென்றனர். அவர்கள் செல்லும் வழியில் முட்களையுடைய கரிய மலைகளைக் கொழிக்கின்ற காட்டாறுகளைத் தாண்டி அகன்று சென்றுக் குறைவில்லா சந்தன மரங்களும், அகில் மரங்களும் உடைய மலையைச் சென்று அடைந்தனர்.

### <u>வியாபாரிகளின் சந்தேகமும், அச்சமும் :-</u>

வியாபாரிகள் அருகருகு தாழ்ந்த நிலமும், பச்சை பசேல் சோலைகளையும் வெள்ளிய ~~மணல~~ மணலினது பரப்புள்ள ஒரு ஸ்தலம். அந்த ஸ்தலத்தில் அனைவரும் தங்கியிருந்தனர். அப்போது நபிபெருமானிடம் வந்து ஒருவன் மலைகளை உடைய இந்தக் காட்டில் திருடர்கள் உண்டு என்றும் சொல்லும் சந்தேகம் கொண்டு கண்களால் கண்டேன் என்றும் கூறினான்.

அவ்வாறு அனைவரும் தங்கியிருந்த அவ்விடத்தில் திருடர்கள் உண்டென அவன் கூறியதும் சிலபேர் நாங்களும் கண்களினால் கண்டோம் என்றும், சிலபேர்கள் மனதின

## பெருமையான நாய்க் கதை:

ஜனார்த்த சிவன் கிருஷ்ணவேணியுடைய
திருவருள் பெற்று நிலையாக நின்றான்.
சித்திரையுடைய பெருமை கொண்டு அவைகளில்
அவர்கள் அகிலத்து யாவர்க்கும் நீங்கள் திருமகளைத்
மனதின்கண் நினைந்து வருந்தப்படாதீர்கள் எனச் சொன்னது.

மேகலையது ஆம்பா கிருஷ்ணாவையுடைய
பெருமான் அனைவரையும் தங்களது பிள்ளையாய்
நடத்துகின்றனர் என்று சொல்லி நீங்கள் அச்சப்பட வேண்டாம்
மேலும் பெருமைக்குரிய இந்த மையானை நோக்க
அவ்வண்ணம் அவ்வாறானது திருமகள் தானுமிக
வண்ணம் நிலையைச் சாதித்தரும்பு வாழ்வாய்
வரும். அதனால் திருமகள் உயிர்களை வெல்ல
மாட்டார்கள் என்று தான் கண்ட சொப்பனத்தைச்
சொன்னார்.

## வியாபாரிகளை காத்த ஆறு!

ஒரு முறை சூரியன் போல சொப்பனத்தில்
கொடிய நிலவு வியாபாரிகளின் கூண்டனை
நடந்து.. ஆறானது அழிகளைக் கிளப்பி
அந்தக் காடு முழுவதும் பாய்ந்து கரைகளையும்
ஆக்கிரமித்தது வயிற்றின்டத்தை நிறைந்தது.
வியாபாரிகள் அனைவரும் அந்த பெரிய ஆற்றி
னது கரையை மோதிச் சென்று இஃது நல்ல
பாதையென்று சொல்லி நடந்தனர். அத்தருணத்தில்
திருமகள் வந்து மணம்கமழும் மாலைக்
கொடுப்பவர் வந்து நின்றுச் செவ்வையாக
இவர்களைப் பார்த்தும் அவர்களால் பார்க்க முடியாமல்
அனைவரும்பின. பிராந்தத்தை கொண்டவர்களான
அத்தனைவரும் ஒன்று சேர்ந்து ஆதரவாய்
கடையாய் இந்த ஆறானது வந்து ஒதுங்கிட்டது.

குடைமேகம் நபியை கவித்தல் :

அவ்வாறு ஆறானது நீர்பெருக்கெடுத்து வந்து நபிகளை இங்கு வரவிடாமல் தடுத்து பாதுகாப்புகளைன்று ஒருவருக்கொருவர் கூறி ஆச்சரியப் பட்டனர். பின்பு வள்ளலாகிய நபிபெருமானவர்களை சுற்றி அப்பாலத்தின் வழி நடந்து சென்றனர்.

<u>அபூஜகல்</u> <u>மறைத்தலும்</u>, <u>போற்றலும்</u> :

வஞ்சகத்தினையுடை மனசும் கீழ்மையான அபூஜகல் என்பவன். நபிபெருமானை குறித்த வியாபாரிகளை நோக்கி சிறிதும் பயமின்றி பார்த்து கோபம் கொண்டு குடைமேகு வந்ததையானால் கற்று இடத்தின் கண் ~~[illegible]~~ செய்தது யாவும் மாயாஜாலம் கொண்ட செய்கையே அல்லாமல் வேறொன்றும் அன்று என்று கூறினான். நபிபெருமான் அவர்கள் பாதகனான அபூஜகலின் வார்த்தைகளைக் காதுகளில் கொள்ளாது மேகக்குடையின் கீழ் விளங்கும் மலைபோல இரு புயங்களும் பிரகாசிக்கும்படி நடந்து சென்றார்கள்.

மக்கா நகரத்தை உடையவர்களாகிய அவ்வியாபாரிகள் அனைவரும் இரத்தின கற்களின் ஒளியை போல் விளங்கும் ஆற்றினது ஆபரணம் என்று சொல்லும் ஒரு கரையானது பக்கத்தில் வாசனை பொருந்திய மெல்லிய புஷ்பங்கள் நிறைந்த சோலையின் கண் தங்கச் சென்றனர்.

<u>சோலையில்</u> <u>நபி பெருமான்</u> <u>இறங்குதல்</u> :

அச் சோலையானது ஒப்பற்ற விண்ணுலகத்தினை இருந்தது போல, ஒளி வீசி பிரகாசிக்கும்படி அழகிய தோற்றமுடையான பாதங்களைப்பெற்ற குணத்திகளின் கூட்டமாகிய நட்சத்திரங்களின் கூடுதல் சமுத்திரத்தினது அலைகளின் உச்சியால் எழும்பா நிற்கும் சந்திரனைப் போலவும். மாலைகளைத் தாழ்ப்பெற்ற தோள்களையும் உடைய

அலகு - 2

## தேம்பாவணி - வீரமாமுனிவர்

### வளன் சனித்த படலம்

### நாவிதன் ஆட்சி

பாடல் : 1

பெருமைவாய்ந்த எருசலேம் திருநகரத்தில் உடலுக்கு உயிர்போல பெருமை வாய்ந்த நாவிதன் இன்பமாக அரசு வீற்றிருந்து பகைவர் அச்சங்கொள்ள பாவலர் புகழ்ந்து சொன்ன பாடலின் மேலாக விளங்கினான்.

பாடல் : 2 அவன் உயிர்களிடத்துக் கருணையால் நிறைந்த நெஞ்சம் படைத்தவன். துளிகளின் மிகுதியால் நிறைந்த மழைபோல் கொடுக்கும் கையை உடையவன், மலர்ச்சருள்களால் நிரம்பக் கட்டிய மாலை அணிந்த மார்பு கொண்டவன், பொன் அணிகலன்களால் நிறைந்து மலைபோல் திரண்ட புயங்களை உடையவன்.

### கோலியாத்தின் அறை கூவல்

பாடல் : 2

மெய் வேதம் வடிந்த்திய வளம் கொண்ட சூதேய நாட்டில் சவுல் என்ற மன்னன் ஆண்ட முறை நடந்த போது மலைகளில் சஞ்சரித்த பிலித்தையர் அவ்வேதத்தைப் பகைத்தவராய் மேகம் நின்று மழைப் பொழிந்ததற்கு ஒப்பாக அம்பு மழை பொழிந்து போர் செய்யுமாறு எதிர்த்து வந்தனர்.

பாடல் : 3 மதிலின் சிறப்பாய் பகைவர் நுழைய முடியாத எருசலேம் திருநகர் முழுவதும் நடுங்குமாறு சூரிய

ஒளியால் கிரண் பரப்பிய அனைத்து வந்து நின்ற மிகுந்தையர் நடுவே உள்ளீர கொண்ட மழை நீண்ட கருநிறம் பெற்ற பெருத்த மேகத்தைப் போன்ற உருவத்தைக் கொண்டு தோன்றிய கோலியாற்று என்னும் கொடிய அரக்கனும் எதிர்த்து நின்றான்.

ாடல் : 4.

வெள்ளைப் பெருக்கால் பொங்கிய பெரிய ஆற்றில் எழும் அலையால் கழிந்து போல எருக்கம் பூமாலை திரண்ட கிகழ்ச்சியே சொரியும் நெஞ்சில் அடங்காத அகந்தை பெருகிய அரக்கன் தீப்பொறி பறக்கச் சினந்து ஆங்காரம் பொங்கிய கோப மொழிகளை இடிபோல் முழங்கி இழைத்துக் காட்டிச் சொல்வான்

டல் : 5

சிறந்த போரைச் செய்யவென்று கூறிய நமக்குள் பக்கத்திற்கு ஒருவன் இங்கு வந்தனைய சிறப்புள்ள நானும் அவனும் சிறந்த போரைப் பக்கத்திற்கு ஒருவனாகத் தனித்தனி நின்று தாக்க, எம்முள் தோற்றவன் பக்கத்தாரக்கு

தாவிதன் வீரவுரை :

நாற்பது நாள் கடந்து சென்றபின் இளமை வாய்ந்த தாவிதன் தன் தமையன்மார் மூவர் போர் செய்யப் போயிருந்தமையால் அவர்களை அனுசிக்க காணும் ஆசையால் அங்கு வந்து சேர்ந்து நடந்த யாவற்றையும் அச்சத்தோடு சொல்லவும் கேட்டான். கடவுளையே இகழ்ந்து பேசிய அயலவன் யார்? எனக் கேட்டான் தாவிதன். உடல் வலிமையால் மட்டுமே வெற்றி கிட்டாது கடவுள் அருளால் மட்டுமே வெற்றி கிடைக்கும் என்றான் அவன்.

அவனை வெல்பவன் என்றான். ...
அரசனிடம் கடவுளைப் பகைத்தவனை வெல்ல
வல்லமையும் என்றான். அதுமட்டுமல்லாமல்
கொல்லும் விலங்குகளையே கொன்ற எனக்கு
இவன் எம்மாத்திரம் என்று கூறிய தாவீதனிடம்
அரசன் நிறைவடைந்து ஆயுதங்களை தரவும் தாவீதன்
மறுத்து அகன்றான்.

## கோலியாத்து வீழ்ச்சி:

இசுரயேலர் ஆரவாரத்த ஓசையை அரக்கனாகிய கோலியாத்து கேட்டு இன்று போருக்கு எதிர் வருவதாகக் கண்ட சிறுவனாகிய தாவீதனை கண்டு கோலியாத்து வேலோடு வந்து இடிபோலக் கூச்சலிட்டான். "மன்னர் யானையை நாய் எதிர்க்குமோ? நான் ஊதி விட்டால் பொடி ஆகிவிடுவாய்". என்று எச்சரித்தான். தாவீதன் கவண்கல்லை அரக்கன் மீது வீசியதை யாரும் கண்டிலர். ஆனால் அவன் கல்வீச்சால் அரக்கன் வீழ்ந்ததை கண்டனர். இடி விழுவது போல விழுந்த கோலியாத்தின் தலையை தாவீதன் துண்டித்தான்.

## தாவீதன் பெற்ற வாக்குறுதி:

கோலியாத்தை வீழ்த்திய சிறுவன் தாவீதன் பெருவீரனாய் விளங்கி மறைவிடம் எல்லாரும் அன்பு செலுத்தச் செய்தான்; இரவலர்களுக்கு வாரி வழங்கினான், பகைவரை வென்றான், மக்கள் பற்றிப்படரும் கொழுகொம்பும் ஆனான். அருட்கொத்தோடு புகழும் பெற்று நல்ல வரங்களோடு செங்கோலாட்சி செய்தான். அப்பொழுது ஒருநாள்

வாக்குறுதியான் வந்த தோன்றல் :

கடவுள் வரத்தால் பெறும் மகன் யானை முதல் எவ்வுயிர்க்கும் அருளுவான். நான்கு வகைக் குற்றங் களும் நீக்கிச் செங்கோல் வழுவா ஆட்சி புரிவான். இவ்வாறு சிறப்புகளையுடைய தன் குலத்தில் மகனாய் பிறந்து வரம் பெறும் இதனைத் தெரிந்து கொண்டான். நாவலனின் இலக்கணையால் செல்வமே ஐயமாக வரிய வனாய் அவனைப் பார்க்கச் செய்தான். வரியவனாய்த் தோன்றிய சீதையை வாழ்வரும் வேந்தரும் வணங்கு -மாறு ஆண்டவன் செய்தான்.

மாசகன்ற கருப்பம் :

எல்லாவற்றையும் அருளும் கருணை வள்ளல் ஆண்டவனால் சீபிக்கு கரு உண்டாகியது. கருப்பம் உற்றதால் வந்த துன்பத்தை மறந்தாள். அவள் முகம் சித்திரம் போல் ஒளிர்ந்தது. ஐம்பூதங்களும் பகையை நீங்கி இணைந்ததால் அவள் கருப்பம் மலரோடு பிறந்த தேன் போல் ஆயிற்று. அரசன் மாளிகையுள் புகுந்தது போல் ஆண்டவன் உயிரைப் படைத்து அவன் உடலினுள் செலுத்தினான். கருப்பத்தின் வழியாகச் சேரும் பாவத்தை ஆண்டவன் அன்றே அழித்திட நினைத்தான். சீபி கருப்பத்தினுள் நடந்த ஒன்றை அறியாமல் எஞ்சி கொண்டவளாக வாழ்ந்தி னாள்.

தேம்பாவணியாய் பிறந்த மகன் !

இருள் கெடுமாறு சந்திரன் கொண்ட அழகு போல் ஒளி நிறைந்த முகத்தோடு விளங்கி பிறந்த மகனின் அழகைக் கண்டு பலரும் கொண்டாடுகி

அனப்பைக் கண்டு தாய் நெஞ்சம் குளிர்ந்தாள். அக்
குழந்தையின் முகம் கண்ட அனைவரும் மகிழ்ந்தனர்.
இவன் ஆண்டவன் அபரகளுக்கு உரிய மாலை போன்ற
-வன் என வாழ்த்தினர், பொன்னிறமும் மணி சாயலும்
உடைய அக்குழந்தையைச் செய்யுளை வடித்
திறந்து வணங்குக என வாழ்த்தினர், இவன் இரவுக்கு
அரசனாகிய சந்திரன் போல் இளர அசி வெண்மையான்
வாடாத இக்குழவி என் மார்பில் வாடாத மாலை
யாய் இலங்குவான் என வானக்குரல் ஒலித்தது.
எம் ஆண்டவனே வாடா மாலை எனக் கூறிய
புகழ்ந்தனர் மக்கள்.

# சத்திய சோதனை

(நாடகம்)

நாடக நெறியாள்கை

டாக்டர் கே.ஏ.குணசேகரன், எம்.ஏ., பி.எச்.டி.,

இணைப் பேராசிரியர்
ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப்பள்ளி
பாண்டிச்சேரி பல்கலைக்கழகம்,
புதுவை

'அரிச்சந்திரன் மயான காண்டம்' நாடகம் தன் பாரம்பரிய கட்டியக்காரன் தடால் புடால்களோடு தொடங்குகிறது. ஒரு புதுமைப் பெண் 'இது பெண் அடிமைத்தனத்தை வற்புறுத்துவது. ஆகவே நடத்தக்கூடாது' - என எதிர்க்கிறாள்.

கட்டியங்காரனுக்கும் அவளுக்கும் வாக்குவாதம். இறுதியில் அவர்கள் அரிச்சந்திர நாடகம் மயான காண்டத்தையும் இவர்கள் இன்றைய சமுதாயத்தில் பெண்களுக்கு சமூகமும் போலீஸும் இழைக்கும் கொடுமையையும் நாடகமாக நடத்த ஒப்புக்கொண்டு நாடகங்கள் நடத்துகிறார்கள். பின்புறத்தில் மேடை ஆறு அடி உயரத்தில் உள்ளது. அது ஒரு விரிவான தளம். அதையொட்டியே தாழ்வாக முன்புறத்தில் நாலு அடி உயரத்தில் மேடை. அதைப் போலவே அமைந்துள்ளது. இரண்டு தளங்களும் ஏணிப் படிகளால் இணைக்கப்பட்டுள்ளன. மேலே விதானம் எதுவும் இல்லை. திரைகள் இல்லை. ஒளி அமைப்பின் மூலமாக காட்சி மாற்றங்களைக் காட்டு கிறார்கள். பின்புறத்தில் பழைய நாடகம் நடக்கும்பொழுது ஒளி மேலே பாய்கிறது. நவீன நாடகம் நடக்கும்பொழுது ஒளி முன்னுள்ள கீழ்த்தளத்திற்கு வந்துவிடுகிறது.

பெண்ணடிமைத்தனம் மாறவில்லை; நவீன வடிவம் பெற்று உள்ளது என்பதை பழைய புதிய காட்சிகள் விளக்குகின்றன. இரண்டு நாடகங்களிலுமே பொது ஜனங்களாக வருவோர் 'ஆமாம் சாமி' போடுகிறார்கள். உரத்துப் பேசுகிற அடாவடிகளின் குரல்களுக்கு அடி பணிகிறார்கள். அடாவடிகளின் கொடுமைகளை நீதியாகப் போற்று கிறார்கள்.

ஆடைகள் அணிகள் மட்டுமே காலங்களுக்கேற்ப மாறியிருக்கின்றன. ஆனால் மனிதர்கள் அவர்களே. பழைய புதிய நாடகக் காட்சிகளுக்கிடையே பூனைப்பாரி, அக்கினிச் சட்டி ஆட்டங்கள் வருகின்றன. பூனைப்பாரி புதுமைப் பூனை விடுதலைக் குறியீடாகவும், அக்கினிச் சட்டி கொடுமைகளுக்கு எதிரான ருத்ர தாண்டவக் குறியீடாகவும் காட்டப்பட்டு அதுவரை பார்வையாளர்கள் சேகரித்து வைத்துள்ள உணர்வுகளின் கன பரிமாணத்தை ஏற்றுவதாக உள்ளது. அரிச்சந்திர நாடகம் வழக்கமாக சத்தியந் தவறாத அரிச்சந்திரனின் உறுதியை, சிறப்பை மையமாகக் கொண்டு விரியும். இந்நாடகத்தில் அரிச்சந்திரனின் கொள்கைக்காக சந்திரமதி பட்ட கொடுமை துயரம், அவலங்களினை மையமாகக் கொண்டு வளர்கிறது. இன்றைய சமூகத்தில் பெண் குழந்தைகள் கல்வியில் புறக்கணிக்கப்படுவதும், வரதட்சணைக் கொடுமை, ஆண்களோடு பேசுதல் கூடாது, மனம் விட்டு சிரிக்கக்கூடாது, மணவாழ்க்கையில் சமத்துவம் இன்மையும் சித்திரிக்கப்படுகிறது.

இறுதியில் தன் சத்தியத்திற்காக தானே தன் மனைவியை வெட்டப் போகும் அரிச்சந்திரனையும், ஆண்களைத் திட்டி உரிமைக்குப் போராடும் புதுமைப் பெண்ணைக் கைது செய்து இழுத்துச் செல்லும் போலீசையும் எதிர்த்துப் புரட்சிக்குரல் ஒலிக்கிறது. இது நாடகத்தின் அவலம் பெருக்கும் இறுதிக்காட்சியாகும். ஜனநாயக நாட்டில் ஜனநாயக உரிமை கேட்பது என்பதே மிகப் பெரிய குற்றமாகக் கருதும் இழிநிலையில் நமது மக்களின் நாகரிகம் அடிமைத்தனமாக உள்ளது என்பதை பளிச்சென வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இந்நாடகம் இந்த இழிநிலையை மாற்ற மனித நேயமும் ஞானத் தெளிவுமிக்கவர்கள் அணிவகுக்க வேண்டும் என நாடகம் அறைகூவல் விடுகிறது. நாடகம் முழுக்க நறுக்குத் தெறிக்கும் வசனங்களும், கிராமிய சொல்லாடல்களும் வெடித்து வர, பார்வையாளர்கள் அதிர்வுகளுக்கும் ஆனந்தங்களுக்கும் உள்ளாகிக் குலுங்குகிறார்கள். நாடகத்தில் நடித்த பாண்டிச்சேரி பல்கலைக்கழக நாடகத்துறை மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும் பாத்திரங்களோடு ஐக்கியமாகி இருந்தனர். காட்சி மாற்றங்கள் புதுமையான ஒளி மாற்றங்களில் கவிதையாக மிளிர்கின்றன.

அரிச்சந்திரன் நாடகம் நம் மண்ணில் பலராலும் அறியப் பட்ட... தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் 19-ஆம் நூற்றாண்டின் இறுதி... இதனை இசைநாடகமாகத் தமிழகத்தின் பட்டி தொட்டிகளெங்கு... நிகழ்த்தினார்.

அரிச்சந்திரனுக்கு ஏற்பட்ட சத்திய சோதனையாக இந் நாடகத்தை நா... அறிந்துள்ளோம். இந்நாடகத்தில் சந்திரமதியின் சத்திய சோதனை... அழுத்தப்படுத்திக் காட்டுவது தவிர்க்க இயலாததாகியுள்ளது. இத... காரணம் இன்றைய பெண்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பழ... மரபு கொண்ட அரிச்சந்திரன் நாடகத்துள் நடிக்க நேர்ந்ததாகும்.

அரிச்சந்திரன் தன் கொள்கைக்காகத் தனது மனைவியை விலைக்கு... விற்றது இங்குக் கேள்விக்கு உள்ளாக்கப்படுகிறது. அரிச்சந்திரன் மனைவி... சந்திரமதியை அரிச்சந்திரனே விலைக்கு விற்றதும், அதன் வழியே... அவளை அடிமையாக்கியதும், மனைவியைத் தன் சுய கொள்கைக்காக... சுடுகாட்டில் வைத்து அரிவாளால் வெட்ட நின்றதும் பெண்ணினத்தா... கேள்விக் குள்ளாக்கப்படுகிறது.

சந்திரமதியும் உண்மையான வாழ்க்கையையே வாழ்கிறாள். எனினு... அவள் தனக்கு வந்த இன்னல்களைத் தாங்கிக் கொண்டு வாழ்ந்தா... பெண்கள் பிரச்சினையைப் பேசும் இந் நாடகத்தில் இன்றைய சமூக... தரும் பெண்கள் பிரச்சினையை இன்றைய பெண்ணினத்தி... பிரதிநிதியாக உள்ள சந்திரிகா துணிவோடு எதிர்கொள்கிறாள்.

உண்மையான வாழ்க்கை வாழ்வோருக்குக் காலங்காலமாகச் சமூக... தரும் சத்திய சோதனையே இது. வாழ்க்கையை எதிர்கொள்ளும் வித... காலத்துக்குக் காலம் வேறுபடுகிறது.

: மாட்டையும் கன்னுக்குட்டியையும் வெல குடுத்து வாங்கினாக இல்லையா? கன்னுக் குட்டி செத்துப்போச்சு. அதனாலே காசு போச்சேன்னு அழுகிறாங்க.

: இதுதான் விசயமா?

: சுவாமி! தயை கூர்ந்து எனக்கு விடை கொடுக்க வேண்டும். இறந்த மகனை எடுத்து அடக்கம் செய்து விட்டு உடனே வந்து விடுகிறேன்.

: என்னடி சந்திரிகா! வீட்டு வேலைகள்ளாம் செஞ்சிட்டியோ! இல்-யோ! அடுப்பக்கூட்டிச் சாம்பல் அள்ளிட்டியா? வாசல் கூட்டிச் சாணம் தெளிச்சுக் கோலம் போட்டியா? மாட்டுத் தொழுவம் கூட்டி அள்ளிக் குப்பையைக் கொண்டுபோய் வயல்ல கொட்டினியா? பாத்திரம் பண்டங்களக் கழுவினியா? காப்பி போட்டியா? பலகாரம் பண்ணிவச்சியா? நெல்லுக்குத்தி அரிசியாக்கிக் கல்லு மண்ணு இல்லாமப் பொடச்சு வச்சியா? தயிரக் கடஞ்சு நெய் எடுத்தியா? துணி மணிகளத் தொவச்சுக் காயப்போட்டியா?

: வீட்டு வேலையெல்லாம் செஞ்சு முடிச்சிட்டேன் அம்மா. விடை கொடுங்கள் அம்மா!

: பெற்ற வயிறல்லவா பாவம், அனுப்பு, போய் வரட்டும், வேலையெல்லாம் செஞ்சுட்டா ளாம்டீ...

: இங்கே பார்! சீக்கிரம் போய் அடக்கம் செஞ்சுட்டு சீக்கிரமே வந்துடு. (கண்ணீரைச் சந்திரமதி தன் சேலை முந்தானையால் துடைத்துக்கொள்கிறாள்). நீ ஏண்டி அழுதிண்டிருக்கே. என் பணம் போச்சேன்னு நாந்தாண்டி அழுதிண்டிருக்கணும். போ போனோம் வந்தோம்னு இருக்கணும். ம்- ம்- ம்-

: அய்யோ! அப்பா! மகனே பாம்பு... என அழுது செல்லல் (ஆர்மோனியம், குரல், பின்பாட்டுக் குரல் வாங்கிப்பாடும் சமகாலத்தில் ஆட்டக் குழுவினர்

பணக்கா... ...களைப் பார... ...ள? ...
குடிசைகளைப் ...
போலீஸ் தன் கடமையைச் செய்யவிடாமல் நீங்க...
குறுக்கிட்டுள்ளீர்கள். மக்களைத் தவறான வழிக்...
அழைத்துச் செல்லத் தகாத வழிமுறைக...
மேற்கொண்டுள்ளீர்கள். நீங்கள் ஒரு பெண்ணா...
அதைச் செய்து இருப்பதால்...

நிறுத்துங்கள். ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீ...
என உங்கள் நீதி அமைய வேண்டாம். உங்கள் சட்ட...
என்ன சொல்கிறதோ அதைச் செய்யுங்கள்.

ஆர்டர் ஆர்டர்

போலீஸ் தம் கடமையைச் செய்யும்போது தடுத்...
குற்றத்திற்காகவும், சமூகத்திற்கு எதிரா...
நடவடிக்கைகளைச் செய்யப் பொதுமக்களை...
தூண்டிய குற்றத்திற்காகவும் பெண்ணுரிமை எனு...
பெயரில் இளைய சமூகத்தைத் தவறான பாதைக்...
இழுத்துச்செல்ல முயன்ற குற்றத்திற்காகவு...
சந்திரிகாவுக்கு இ.பி.கோ.

(ஆட்டக்குழு இசைக்கருவி முழங்க ஆடிவந்...
பக்கங்களில் நிற்கிறது.)

இனி மேலும் பெண்கள் தலைகுனியும் அதே...
(சந்திரிகாவைக் காட்டி) அந்தச் சந்திரமதிகளா...
இருக்கப் போவதில்லை. பெண்கள் பிரச்சினைகள் இந்...
சமூகத்தி-ருந்தே உருவாக்கப்படுகின்றன. இதோ இந்...
சந்திரிகா போன்றவர்களால் சமூகப் பிரச்சினைகள் எதி...
கொள்ளப்படுகின்றன.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை...
கொளுத்துவோம்" என்றான் பாரதி. ஆனா நீங்...
மட்டும் இன்னும் எத்தனை காலத்துக்கு...
பார்த்துக்கிட்டே இருக்கப் போறீங்க.

## அலகு - 4

## பயன்முறைத் தமிழ்

அ. <u>விண்ணப்பப் படிவம் வரைதல்</u>:

1. மருத்துவ வசதி கோருதல் தொடர்பாக.
2. மதிப்பெண் பட்டியல் பெறுதல் தொடர்பாக
3. நூலக வசதி வேண்டுதல் தொடர்பாக
4. மாற்றுச் சான்றிதழ் பெறுதல் வேண்டி.

ஆ. <u>கவிதை படைத்தல்</u>

1. 'இரையை நோக்கி'
2. 'கொரோனா விழிப்புணர்வு

இ. <u>கட்டுரை வரைதல்</u>:

1. கொரோனா நோயின் தீமைகள்
2. இயற்கைச் சீற்றங்களும், தடுப்பு முறைகளும்
3. அறிவியல் தமிழ்.

ஈ. வாக்கிய வகைகள்:

1. செய்தி வாக்கியம்
2. உணர்ச்சி வாக்கியம்
3. வினா வாக்கியம்.
4. கலவை வாக்கியம்

## செய்தி வாக்கியம்:

சான்று: ஒரு செய்தியைத் தெளிவாகத் தெரிவிக்கும் வாக்கியம்

1. இளமையில் கற்க வேண்டும்.
2. நீ நன்றாக படிக்க வேண்டும்.
3. மாவட்ட ஆட்சியர் சென்னை சென்றார்.
4. கவியமுதன் பரிசு பெற்றான்.

## உணர்ச்சி வாக்கியம்

உவகை, அவலம், அச்சம், வியப்பு முதலிய உணர்ச்சி உணர்த்தும் சொற்களை பெற்று வரும் இந்த வாக்கியத்தில் ஆ, அந்தோ, என்னே என்ற வார்த்தை இடம் பெற்றிருக்கும்

1. என்னே! தாஜ்மகால் அழகு.
2. ஆகா என்ன அழகு.
3. அந்தோ வெட்கம் வெட்கம்

## வினா வாக்கியம்:

வினாப் பொருள் தரும் வாக்கியம் வினா வாக்கிய இதில் வினாக்குறி (?) வரும். இதில் எங்கு? ஏன்? எதற்கு? எத்தனை? வினாவை உணர்த்தும் சொற்கள் இடம்பெறும்

1. கோபு எங்கு பிறந்தார்?
2. ஏன் நேற்று வரவில்லை?
3. எங்கே சென்றாய்?

கலவை வாக்கியம்
ஒரு முதன்மை வாக்கியமும் அதனோடு பொருள்சார்ந்த
ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சார்பு
வாக்கியங்கள் சேர்ந்து வருவது.

- நீ நன்றாக படிக்க வேண்டும் என்று ஆசிரியர்
கூறினார்.

ஆசிரியர் கூறினார் - முதன்மை வாக்கியம்
நன்றாக படிக்க வேண்டும் - சார்பு வாக்கியம்

தீண்டாமைத் தீயை காட்டை ஓட்டு இட
நம் கடமை.

| காப்பியம் | | சமயம் | |
|---|---|---|---|
| **ஐம்பெருங் காப்பியங்கள்** | | | |
| சிலப்பதிகாரம் | இளங்கோ | சமணக் காப்பியம் | 500 |
| மணிமேகலை | சீத்தலை சாத்த | பௌத்தக் காப்பியம் | 428 |
| சீவகசிந்தாமணி | | சமணக் காப்பியம் | 314 |
| வளையாபதி | | சமணக் காப்பியம் | 72 |
| குண்டலகேசி | | பௌத்தக் காப்பியம் | 1 |
| **ஐஞ்சிறு காப்பியங்கள்** | | | |
| நீலகேசி | | சமணக் காப்பியம் | |
| சூளாமணி | | சமணக் காப்பியம் | |
| யசோதர காவியம் | | சமணக் காப்பியம் | |
| உதயண குமார காவியம் | | சமணக் காப்பியம் | |
| நாக குமார காவியம் | | சமணக் காப்பியம் | |

## IV. 17, 18 -ஆம நூறறாணடுகளில் நாடகம்:

மராட்டிய மன்னர்கள் காலத்தில் கி.பி. 17-இல் கோயில்களில் நாடகங்கள் நடிக்கப்பட்டன. சரபேந்திர பூபாளக் குறவஞ்சி நாடகம் தஞ்சையில் நடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 18 - ஆம் நூற்றாண்டு முடிய குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகங்களே செல்வாக்கு பெற்றன. திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற் பள்ளு முதலாயின நாடகங்களாயின. வேசியர் வலைப்பட்ட செல்வம் மிக்க இளைஞர்கள் நோயும் வறுமையும் உழந்து மனம் திருந்துவது என்னும் கதையமைப்பினைக் கொண்டது நொண்டி நாடகங்கள். மனந்திருந்திய நொண்டி ஒருவன் மெக்கா சென்று முடம் நீங்கி வாழ்ந்ததாக நடிக்கப் படுவது 'சீதக்காதி நொண்டி நாடகம்'. இவ்வகையைச் சேர்ந்ததே 'இரத்தக் கண்ணீர்' நாடகம்.

## V. 19 -ஆம் நூற்றாண்டில் நாடகம்:

**(அ) வரலாற்று நாடகங்கள்:** மதுரை வீரன் விலாசம், நல்லதங்காள் நாடகம், ரவிவர்மா முதலானவை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை. காசி விசுவநாத முதலியார், டம்பாச்சாரி விலாசம் என்னும் வரலாற்று நாடகத்தை எழுதினார்.

**(ஆ) மொழிபெயர்ப்பு நாடகங்கள்:** *(1)* ஷேக்ஸ்பியரின் **சிம்பலின்** நாடகத்தைத் தமிழில் சத்தியவதி என்னும் பெயரில் இலக்குமணப் பிள்ளை என்பவரும், **சரசாங்கி** என்னும் பெயரில் சலசலோசனச் செட்டியார் என்பவரும் மொழிபெயர்த்தார். *(2)* மேலும் ஷேக்ஸ்பியரின் **வெனிஸ் நாட்டு வணிகன்,** ரோமியோ - ஜூலியட், ஒத்தெல்லோ முதலான நாடகங்களும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டன. *(3)* பின் இரண்டு நாடகங்களைச் **சங்கரதாஸ் சுவாமிகள்** மொழிபெயர்த்தார். *(4)* **லோபி** என்னும் பிரெஞ்சு நாடகமும் மொழி பெயர்க்கப்பட்டது. *(5)* சமஸ்கிருதத்தில் காளிதாசரின் சாகுந்தலத்தை மறைமலை அடிகளும், *(6)* மிருச்சகடிகத்தை பண்டிதமணி **மண்ணியல் சிறுதேர்** என்னும் பெயரிலும் மொழிபெயர்த்தனர். **பேராசிரியர் சுந்தரம் பிள்ளை** அவர்கள் **லிட்டன் பிரபு** எழுதிய The Secret Way என்னும் ஆங்கிலக் கவிதையை **மனோன்மணீயம்** என்னும் பெயரில் மொழிபெயர்த்தார். *(8)* **கோல்டுஸ்மித்** எழுதிய The Hernit என்னும் நூலையும் சைவக் கருத்துக்களைக் கூறும் **சிவகாமியின் சரிதம்** என்னும் பகுதியாக உருவாக்கம் செய்தார். *(9)* **வி.கோ சூரியநாராயண சாஸ்திரியார்:** நாடகவியல் என்னும் பெயரில் நாடக இலக்கண நூல் எழுதியுள்ளார். களவழி நாற்பது நூலை **மானவிஜயம்** என்னும் பெயரில் நாடகமாக்கினார்; கலாவதி, ரூபாவதி, சூர்ப்பனகை என்னும் நாடகங்களையும் இயற்றினார்.

## VI. 20- ஆம் நூற்றாண்டில் நாடகங்கள்

எழுதினார். 4 மணிநேரம் நடக்கக்கூடிய நாடகத்தை ஒரு இரவ
அடித்தல் திருத்தலின்றி எழுதும் ஆற்றல் பெற்றவர். வள்ளி
திருமணம், பிரகலாதன், பவளக்கொடி, லவகுசா, சதி அனுசூ
முதலான நாடகங்கள் இவரது பங்களிப்புகளாகும். தமிழ் நாட
தலைமையாசிரியர் எனப் போற்றப்படுகிறார்.

(2) **பம்மல் சம்பந்த முதலியார்: (1873 – 1964)** நீதிபதியாக இருந்த
நாடக ஆர்வம் மிக்கவர். இளம் பருவத்தில் 18-ஆம் வயதில் தன் மு
நாடகமான புஷ்பவல்லியை எழுதி நடித்தார். கருணைவிலாச
என்னும் நாடக அமைப்பை ஏற்படுத்தினார். 90 நாடகங்
எழுதினார். ரத்னாவளி, வேதாள உலகம், சபாபதி, கள்வர் தலை
முதலானவை புகழ் பெற்ற நாடகங்கள். மாக்பெத், ஹாம்லெ
வெனிஸ் வணிகன், விரும்பிய வண்ணமே முதலான ஷேக்ஸ்பிய
நாடகங்களைத் தமிழாக்கம் செய்து மேடையேற்றினார்.
அனுபவங்களை நாடகத்தமிழ், நாடக மேடை நினைவுகள், நா
கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி? முதலான நூல்க
படைத்துள்ளார். இவரது **மனோகரா நாடகம்** மிகவும் புகழ் வாய்
நாடகத்தில் நடிப்பவர்களைக் **கூத்தாடிகள்** என்னும் நிலை
இருந்து **கலைஞர்கள்** என்னும் நிலைக்கு உயர்த்தினார். எனவே
நாடகத்தின் தந்தை எனப் போற்றப் படுகின்றார்.

(3) **தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர்:** பால மனோகரசப
நிறுவியவர். அரிச்சந்திரன், கோவலன், வள்ளித் திருமணம், தே
ராஜன் முதலான நாடகங்கள் புகழ்பெற்றவை. கதரின் வெ
தேசியக்கொடி, பம்பாய் மெயில் முதலான நாடகங்களின் வாயி
தேசிய உணர்வைத் தூண்டினார். நாடகத்தின் நடு
ஆங்கிலேயர்களைக் குறித்து நையாண்டியாக இவர் பாடும் 'செ
பறக்குதடி பாப்பா' என்னும் பாடல் அரசாங்கத்தையே அ
வைத்தது.

**(4) டி.கே.எஸ். ...**

## VII. தற்கால நாடக ஆசிரியர்கள்.

**(1) கலைஞர் கருணாநிதி:** நாடகத்துறையில் புதுமையை விளைவித்தவர். அண்ணா வழியில் சீர்திருத்தக் கருத்துக்களை மேற்கொண்டார். மணிமகுடம், மந்திரி குமாரி, பராசக்தி, தூக்குமேடை, பூம்புகார் விதவையின் கண்ணீர், நச்சுக் கோப்பை முதலானவை கலைஞரது காவியப் படைப்புக்கள்.

**(2) சோ (இராமசாமி): அங்கதம்** இவருக்குக் கை வந்த கலை. யாரிடமும் சொல்லாதே, நேர்மை உறங்கும் நேரம், சம்பவாமி யுகே யுகே, மனம் ஒரு குரங்கு, இரவில் சென்னை, முகம்மது பின் துக்ளக், யாருக்கும் வெட்கமில்லை முதலானவை இவரது படைப்புக்களுள் குறிப்பிடத் தக்கன.

**(3) கே. பாலச்சந்தர்:** வெற்றிகரமான படைப்பாளி. நீர்க்குமிழி, மெழுகுவர்த்தி, எதிர் நீச்சல், மேஜர் சந்திரகாந்த், சர்வர் சுந்தரம் முதலான நாடகங்களைத் திரைப்படங்களாகவும் தயாரித்தார்.

**(4) கோமல் சுவாமிநாதன்:** சமுதாய அவலங்களைக் கருப் பொருளாகக் கொண்டு நாடகம் எழுதினார். பெருமானே சாட்சி, தண்ணீர் தண்ணீர், ஒரு இந்தியக் கனவு, அலைக்காற்று முதலான இவரது படைப்புகள் புகழ் பெற்றவை.

மேலும், நாரணதுரைக் கண்ணன், அரு. இராமநாதன், பி. எஸ். ராமையா, இந்திரா பார்த்தசாரதி, ஏ. என். பெருமாள் முதலான புலர் இக்கால நாடக ஆசிரியர்களுள் குறிப்பிடத் தக்கவர்களாவர்.